புதுமைக் கவி

# பாரதியார்

ஆசிரியர்:

தி. ஜ. ர.

ry. Thanjavur

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை

உரிமை
பதிவு

1948

மலிவு பதிவு அணா 12
உயரிய பதிப்பு ரூ. 1/-

வேறு
தென்னிந்தியப்
பெரியார்கள்

1. பி. ஆர். ராஜம் ஐயர்
2. மஹான் மணி ஐயர்
3. டாக்டர் உ.வே.சாமிநாதையர்
4. ராய்பஹதூர் பி. அனந்தாசார்லு
5. திரு. வி. கலியாணசுந்தரனார்
6. பச்சையப்ப முதலியார்
7. ஸர்.வி.பாஷ்யம் ஐயங்கார்
8. அன்னி பெசண்ட்

மூன்றும்
பதிப்பு
12-7-1948

அல்லயனஸ பிரஸ்
மயிலாப்பூர்
சென்னை - 4

## ஆசிரியர் முகவுரை

பாரதியாரை நேரே அறிந்தவர் பலர் இருக்கிறார்கள். நான் அவரை நேரே காணும் பாக்கியம் பெற்றதேயில்லை. தூரத்தேயிருந்துகூடத் தரிசித்ததில்லை. நேரே பார்த்தவர்கள் அவரைப்பற்றிக் கதை கதையாய்ச் சொல்லுகிறார்கள்; எழுதுகிறார்கள். அப்படியிருக்க, நான் ஏன் அவர் வரலாற்றை எழுதவேண்டும்? எனக்கென்ன பாத்யம்? ஒன்று, அவரை நான் நேரே காணாதது; இரண்டு, அவருடைய பாடல்களை இன்றைக்கும் ஒரு மாணவனைப்போலவே படிப்பது - இந்த இரண்டும்தான் எனது பாத்தியம்.

அவரை நேரே அறிந்தவர்களில் பெரும்பாலோர் ஒருவர் சொல்வதை ஒருவர் உண்மையில்லை என்கிறார்கள்; ஒருவர் மற்றவர் பாரதியாரைப் பார்த்தவரே அல்ல என்றுகூடச் சொல்லுகிறார்கள். ஒவ்வொருவரும் 'பாரதியாரின் பூஜாரி தாம்தான்' என்பதுபோல் பேசுகிறார்கள். இந்தக் குற்றங்களோ, உபத்திரவங்களோ எனக்குக் கிடையாது. ஏனெனில், பாரதியாரை, நான் பார்த்ததேயில்லை. பாரதியாரின் வாழ்க்கைபற்றி நான் எழுதியிருக்கும் வரலாறு பூராவும் பிறர் சொன்னவை. பாஷைமட்டுந்தான் என்னுடையது. இதை முதலிலேயே வாசகருக்கு எச்சரித்துவிடுகிறேன்.

பல வருஷங்களுக்கு முன் தஞ்சையில் பத்திரிகை நண்பர் ஒருவரை அறிமுகம் செய்துகொண்ட போதுதான், பாரதியைப்பற்றி முதன்முதலாக நான் அறியலானேன். நண்பரின் கையிலே ஒரு புஸ்தகம் இருந்தது.

"அது என்ன?" என்று கேட்டேன்.

"பாரதி பாட்டு."

எனக்கு இதனுடன் அதிலே சிரத்தை போய்விட்டது. என் சிறு வயதிலே, தமிழ்ப்பாட்டு என்றால், அவ்வளவு வெறுப்பு. 'மங்கும், தங்கும், பொங்கும்' என்ற அர்த்தமற்ற புதிய சாஹித்தியங்களைக் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன வெறுப்பு.

ஆனால், அந்த நண்பர் என்ன நினைத்தாரோ தெரியவில்லை. "இதோ பாருங்கள் ஒரு பாட்டு" என்று சொல்லி,

"முருகா, முருகா, முருகா!" என்று கோடையிடி போல் கர்ஜிக்கத் தொடங்கினார்.

பாரதியைச் சுற்றி அவர் போட்ட இரண்டாவது வேலியாயிற்று இது. ஏனென்றால், புராணத் தெய்வங்களைப்பற்றிய ஸ்தோத்திரங்களில் வெறுப்புத் தட்டத் தொடங்கும் உணர்ச்சிக் கனவுகள் நிறைந்த வாலிபப் பருவத்தை அப்போதுதான் நான் எட்டியிருந்தேன். ஆகையால், நண்பரின் பாட்டிலே எனக்குச் சிறிதும் சுவாரஸ்யமில்லாது போயிற்று.

என்றாலும், நண்பர் மேலும் பாடினார்; ஆவேச வெறியோடு பாடினார். அவர் ஒரு நாஸ்திகர்; சுயமரியாதைக் காங்கிரஸ்வாதி. முருகனைப்பற்றி அவர் பாடியதே விசித்திரமாயிருந்தது. அதோடு, வெறி கொண்ட உபாசகரைப்போலவும் பாடியது என்னைத் திடுக்கிடச் செய்தது. "அப்படி அந்தப் பாட்டிலே என்ன இருக்கிறது?" என்று அன்று யோசிக்கத் தொடங்கினேன்.

அந்த நேரத்திலிருந்து பாரதி என்னிடம் வளர்ந்து வருகிறார். "பாரதி உலனிடம் வளரவாவது? என்ன

அதிகப்பிரசங்கித்தனம்! நீ பாரதியிடம் வளர்ந்து வருகிறாய் என்று சொல்” என்று நண்பர்கள் கண்டிக்கக் கூடும். வைத்துக்கொள்ளுங்களேன், பூமி சூரியனைச் சுற்றினாலும் பூமியைச் சூரியன் சுற்றுவதாகவே மதிக்கும் பஞ்சாங்கம் இன்னும் நம்மைவிட்டுப் போகவில்லையே! அதற்கென்ன சொல்லுவார்கள் அந்த நண்பர்கள்? நாம் முக்கால்வாசி நேரம் நமது ‘பஞ்சாங்க’ பாஷையில்தான் பேசுகிறோம், எழுதுகிறோம், படிக்கிறோம். அறுத்தெறியும் நகம்போல, உயிரும் ஜடமும் சந்திக்கும் பாலம் பாஷை. அந்தக் குறையை ஒருநாளும் அடியோடு ஒழிக்க முடியாது. இது ஒரு தனிக் கதை; போகட்டும்.

பாரதி என்னிடம் வளர்கிறார் என்றா சொன்னேன்? என்னிடம் மாத்திரமல்ல; தமிழ்நாடு பூராவும் வளர்கிறார்; பல தமிழ் அறிஞர்களிடம் வளர்கிறார். வரவர உயர்ந்தோங்கி வளர்கிறார்.

சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னே, ஒரு தமிழ் ரசிகர் - எழுத்தாளர்தான் - பாரதியை நல்ல கவிஞர் என்று ஏற்றுக்கொள்வதில்லை.

“என்ன, ஐயா! ‘செந்தமிழ் நாடென்னும் போதினிலே - இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே’ யாமே! பாட்டா இது? தேன் வந்து காதிலே பாயவாவது! சுத்த அபத்தம்! அபத்தம்!” என்று அவர் பரிகசிப்பது வழக்கம்.

அதே நண்பர், இரண்டொரு வருஷங்களுக்கு முன்னே ஒரு பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதைப் படித்தபோது எனக்கு ஒருபுறம் எரிச்சல் வந்தது; மறுபுறம் நகைப்பும் வந்தது.

அதே ‘செந்தமிழ்நாட்டுப் பாட்டுகளைக் குறித்து கட்டுரைதான்.

"தேன் வந்து பாயுது காதினிலே. ஆஹா! என்ன அருமையான வரி இது! ஒரு கவிஞன்தான் இப்படிப் போடமுடியும்!" என்றெல்லாம் நண்பரின் கட்டுரை புகழ்ந்திருந்தது.

இப்போது உங்களை நான் கேட்கிறேன்: பாரதி நம்மிடையே வளர்கிறாரா? இல்லையா?

பாரதி வளரத்தான் வளர்கிறார். கொஞ்சகாலத்தில் அவருக்குக் கோயில்கூடக் கட்டிவிடுவார்கள் என்று தோன்றுகிறது. (பாரதியாருக்குக் கோயில் கட்டுவதில் எனக்குப் பரிபூர்ண சம்மதம். ஆனால், அங்கே முதல் தேங்காய்மூடி மரியாதைச் சண்டை மாத்திரம் வர லாகாது என்பதே என் பிரார்த்தனை.) ஆனால், பாரதியாருக்கு யார் கட்டும் கோயிலையும்விடப் பெருங்கோயில், அவருடைய சொந்த நூல்களேயாகும்; யார் கொண்டாடும் விழாக்களையும்விடப் பெரிய விழா, அந்த நூல்களிலே வாசகர் அடையும் உணர்ச்சிப் பெருக்கே யாகும்.

பாரதியார் ஓர் அபூர்வ புருஷன்; மேதை. அவருடைய வாழ்க்கை வரலாற்றை விஸ்தாரமாக, ஆதார பூர்வமாக எழுதவேண்டும். அவருடைய கவிதையை, சம்பூர்ணமாக ஆய்ந்து மதிப்பிடவேண்டும். இந்த இரு துறைகளிலும் இந்தச் சிறிய புஸ்தகம் ஏதும் சாதித்துவிட்டதாக நான் பாத்தியம் கொண்டாடவில்லை. இது ஒரு சிறிய ஜீவிய சரித்திரம்; அவ்வளவே. இதில் பாரதியாரின் வரலாற்றுப் பகுதியை எழுத எனக்கு உதவியாயிருந்தவை: ஸ்ரீ விசுவநாதன், ஸ்ரீ ஆக்கூர் அனந்தாச்சாரியார், சுவாமி சுத்தானந்த பாரதியார், இம் மூவரும் எழுதிய பாரதி சரித்திரங்களும், பாரதி பிரசுராலயத்தாரின் பாரதி நூல்களும், 'ஹிந்துஸ்தான்' வாரப் பத்திரிகையின் வருஷ மலர்களில் வந்த சில அரிய

கட்டுரைகளும் ஆகும். முதல் பதிப்பில் இல்லாத சில விஷயங்களை, ஸ்ரீ வ. ரா. எழுதிய 'மகாகவி பாரதியார்' என்ற அற்புதமான 'சக்தி காரியாலய'ப் பிரசுரத்திலிருந்து தாராளமாக எது இதில் சேர்த்திருக்கிறேன். அவற்றின் ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த வந்தனம் உரியதாகும்.

தி. ஜ. ர.

# உள்ளுறை


1. பாரதி சகாப்தம்
2. ஜனனமும் இளமையும்
3. கல்வியும் கவி தாசக்தியும்
4. தேசபக்திக் கனல்
5. புதுவை அக்ஞாத வாசம்
6. வறுமையும் துன்பமும்
7. உத்தமர் உறவு
8. 'மீண்டும் பிரிட்டிஷ் இந்தியா


## இரண்டாம் பாகம்


1. குணதிசயம்
2. கவிகள் சிருஷ்டி
3. கவியும் வசனமும்
4. நீங்களே படியுங்கள்
5. அழகுத் தெய்வம்
6. தேசிய கீதங்கள்
7. கவி லட்சணம்
8. பாரதியின் வேதாந்தம்

அனுபந்தம் 1

குவளைக்கண்ணன் குறிப்புகள்

அனுபந்தம் 2

பாரதியும் அவரது உபதேசமும்

புதுமைக்கவி

# பாரதியார்

## 1. பாரதி சகாப்தம்

"ஓராயிர வருடம் ஓய்ந்து கிடந்தபின்னர்
வாராது போல வந்த மாமணியைத் தோற்போமோ?"

என்று வினவும் பாரதியும், தமிழ் நாட்டுக்கு அதே மாதிரி, 'வாராதுபோல வந்த மாமணியே' யாவார். நாட்டில் கவிகள் மரபு உயிரற்ற பழைய சம்பிரதாயமாய் மெலிந்து கிடந்தது. காலத்தின் ஜீவனுக்கும், வளரும் ஜன சமூகத்தின் ஊமைக் கனவுகளுக்கும் உருக் கொடுக்கும் ஆதர்ச கவிகளின்றி, புராதன இலக்கியங்களின் பதில்வெட்டுகளைச் சிருஷ்டித்து மார்தட்டிய வெறும் புலவர் கூட்டந்தான் பெருகியிருந்தது. இவ்வாறு சில நூற்றுண்டுகள் கழிந்தபின்பு தமிழன்னையின் கவிதைக் குறையை நீக்க அவதரித்தார் ஸ்ரீ சுப்ரமணிய பாரதியார்.

பாரதியாரின் நூல்களை மதிப்பிட, அவர் காலத்திலே தமிழின் நிலை என்ன என்பதைக் கவனத்தில் வைக்க வேண்டும். அப்போது வசன நடை உருவாகிவந்த ஆரம்ப

தசையிலிருந்த தென்றே சொல்லவேண்டும். அயல் மொழியின் மோகமும் ஆதிக்கமும் வலுத்திருந்த காலம். காலப் போக்கையும் சரித்திரச் சூழ்ச்சிகளையும் நோக்கி, அவற்றுக்கு உழன்று கொடுத்து முன்னேற்றமடைய விரும்பிய அறிஞர் கூட்டத்திலே ஒருவர் இருவர் தமிழில் பற்றுதல் செலுத்தினுல், அது வசன நடையோடு அமைந்து கிடந்தது, பாரதியார் தோன்றினர். அவரது கவிதைப் பிரவாகத்திலே, புதிய புதிய கனவுகள் மிதந்துவந்தன; கவிதா தேவியும் பிரசன்னமானுள். வசனநடைக்கும் அவர் செய்துள்ள கைங்கர்யம் இணையற்றதாகும்.

முதற் சங்க காலம், இடைச் சங்க காலம், கடைச் சங்க காலம் என்றும் வேறு விதமாகவும் தமிழிலக்கிய சரித்திரத்தில் காலப்பிரிவு செய்வதுபோல், இந்தக் காலத்தைப் பாரதி காலம் என்று சொல்லலாம். பாரதியார் தமிழின் புது யுகக் கவி. பாரதியார் தமிழின் சரித்திரத்திலே ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்துவிட்டார். இதைப் பாரதி சகாப்தம் என்று தமிழிலக்கிய ஆராய்ச்சியாளர் எவரும் தைரியமாய்க் கூறலாம்.

---

## 2. ஜனனமும் இளமையும்

தமிழ் மணங் கமழும் இடத்திலே, தமிழ் மணங் கமழும் குடும்பத்திலேதான் பாரதியார் ஜனித்தார். முன் காலத்தில் தமிழ்ப் புலவர்களுக்கும் கல்விமான்களுக்கும் புகலிடமாய் இருந்தது எட்டையாபுரம் சமஸ்தானம். சின்னசாமி ஐயர் என்பவர் அங்கே உத்தியோகம் பார்த்துவந்தார். அவர் திருநெல்வேலி ஜில்லாப் பிரபலஸ்தர்களில் ஒருவர். நல்ல புத்திமான்; சிறந்த குணசாலி. தர்க்கம், வியாகரணம், கணிதம் முதலியவற்றிலும் வல்லவர். கலாசாலை செல்லாமலே ஆங்கிலத்திலும்

நல்ல ஞானம் பெற்றவர். அவருடைய மனைவியார் லட்சுமியும் நல்ல குணவதி. அந்தத் தம்பதிகளுக்குப் புத்திரராக நம் பாரதியார் 1882-ஆம் வருஷம், நவம்பர் மாதத்தில் ஜனித்தார். பாரதியாரின் ஐந்தாவது பிராயத்திலேயே, அவருடைய தாய் காலமாகிவிட்டாள்.

பாரதியாரின் தாய் இறந்துபோனபின், சின்னசாமி ஐயர் மறு தாரம் விவாகம் செய்துகொண்டார். அந்த அம்மாளுக்கு ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தார்கள்.

சிறு வயதிலேயே பாரதியாருக்குப் பள்ளிப் படிப்பு ஒன்றும் அதிகமாக இல்லை. தந்தையே கம்பர், தாயுமானவர், திருவள்ளுவர் முதலிய புலவர்களின் நூல்களைப் பாரதியாருக்குப் போதித்தார். பாரதியாருக்கு அந்த நூல்களில் பெரும் பற்றுதல் அந்த இளமைப் பருவத்திலேயே உண்டாகிவிட்டது. அந்தப் புலவர் மாணிக்கங்களைப் போலவே, தாமும் கவிகள் புனையவும் முயன்றார். பதினொரு வயது முதலே அவர் பாட்டுக்கள் இயற்ற ஆரம்பித்துவிட்டார்.

பதின்மூன்றாவது வயதில் நிகழ்ந்த ஒரு ரஸமான சம்பவத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும். பாரதியார் பெரிய மேதை என்று எல்லோரும் புகழ்வதைக் கேள்விப்பட்ட ஒரு தமிழ்ப்பண்டிதர், பாரதியாரிடம் வந்து, "உன்னை ஏதோ கவியென்கிறார்களே; அப்படியானால், எங்கே, நான் சொல்லுகிறபடி ஒரு கவி பாடு பார்ப்போம். 'வாழை', 'கமுகு' இரண்டையும் பொதுவாக வர்ணிக்கும் சிலேடைக் கவி ஒன்று பாடு" என்று அறைகூறினாராம், பாரதியார் வெகு அலட்சியமாக, ஒரே கணத்தில் அத்தகைய ஒரு கவியைச் சொன்னார். அந்தப் பண்டிதர் தம்மையே மறந்து பரவசமாகி, பாரதியாரைக் கட்டித் தழுவிக்கொண்டு, "அப்பா! உன்னைப் பாரதி யென்று அழைப்பது ரொம்பப் பொருத்தந்தான்" என்று

கூவினாராம். அதற்குச் சில வருஷங்களுக்கு முந்தித்தான், எட்டையாபுர வாசிகளில் அவருடைய பக்தர்களும் அபிமானிகளும் கூடி, ஒரு விசேஷ விழா நடத்தி, அவருக்குப் பாரதி யென்ற பட்டத்தைச் சூட்டியிருந்தார்கள்.

பாரதியாருக்குத் தந்தை இதர பாடங்களைப் போதித்தாலும், மகனைக் கணிதப் புலவனுகச் செய்வதிலேதான் அவருக்குப் பெரிதும் ஆசையாம். தவிர, பையனைச் சீமைக்கு அனுப்பி, கைச் சொக்காய், கால் சராயுடன் அவர் ஜில்லா கலெக்டராய்த் திரும்பிவருவதைப் பார்க்கவும் அவருக்கு ஆசையாம்.

குமாரனைக் கணக்குப்போட அழைப்பார் சின்னசாமி ஐயர். பாரதியார் 'கணக்கு, பிணக்கு, வணக்கு, மணக்கு, ஆமணக்கு' என்று மனதுக்குள்ளே அடுக்கிக்கொண்டே போவார். ஏதோ ஒரு சமயம், போட்ட கணக்கைச் செய்யாமல் விழித்துக்கொண்டு நின்றுர் பாரதியார். 'என்னடா விழிக்கிருய்?' என்றுர் தகப்பனுர். 'விழி, பழி, குழி, வழி, பிழி, சுழி' என்று உரக்கவே சொல்லிய பாரதியார், கணக்கிலும் சுழி போட்டுவிட்டார், பையனுக்குச் சித்தப்பிரமையோ என்று எண்ணி, தகப்பனுர் ஏங்கிப்போனுராம்!

தாயைப்பற்றிப் பாரதியாருக்கு நல்ல ஞாபகம் இருந்ததில்லை. அதில் எப்போதும் அவருக்கு ஒரு மனக்குறை உண்டு. தாயில்லாக் குழந்தைகளைக் கண்டால், அவர் மெய்ம்மறந்து நின்றுவிடுவாராம். என்ன எண்ணங்களெல்லாம் அவரது கற்பனை உள்ளத்திலே அலைமோதுமோ தெரியாது. "என்ன ஓய்! எனக்கு அம்மா மயக்கத்திலிருந்து ஒருநாளும் விடுதலை இல்லையா?" என்று, பக்கத்தில் உள்ள நண்பர்களிடம் அவர் சொல்வாராம். "அம்மா! அம்மா!" என்று இசையோடு கூவுவாராம்.

"ஆகவே, கணிதத்தில் புலமை வாய்ந்த உயிருள்ள தகப்பனுர் தம் மகனைக் கணித சாஸ்திரியாய்ச் செய்ய

முடியவில்லை. மறைவிலிருந்த தாய் அவரைக் கவியாக வளர்த்துவிட்டார்" என்கிறார் வ. ரா.

1897-ஆம் வருஷம் ஜூன் மாதம் திருநெல்வேலி ஜில்லா கீழ்க்கடையத்தைச் சேர்ந்த செல்லப்பா ஐயரின் புதல்வி செல்லம்மாளுடன் பாரதியாருக்கு விவாகம் நடந்தேறியது. விவாகத்தின்போது அவருக்கு வயது பதினைந்து; மணமகளுக்கு வயது ஏழு. இளமை மணந்தான்.

விவாகம் முடிந்த ஒரு வருஷத்துக்கெல்லாம் தந்தை சின்னசாமி ஐயர் காலமானார்.

## 3. கல்வியும் கவிதா சக்தியும்

பிறகு, பாரதியார் திருநெல்வேலி ஹிந்து கலாசாலையில் சேர்ந்து ஐந்தாவ்து பாரம் வரையில் கல்வி பயின்றார். அந்தக் காலத்தில் நிகழ்ந்ததொரு சம்பவம் மிகவும் தமாஷானதாகும்.

காந்திமதிநாத பிள்ளை யென்ற ஒருவருக்கு, பாரதியாரை அவமானப்படுத்த வேண்டும் என்ற எண்ணம். பல நண்பர்களுக்கு முன்னிலையில் பாரதியாரை நோக்கி, "எங்கே, நீர் பெரிய கவி என்கிறீரே; பாரதி சின்னப் பயல் என்ற பதத் தொடரை ஈற்றடியாகக் கொண்ட ஒரு வெண்பாக் கட்டும் பார்ப்போம்" என்று காந்திமதிநாதர் கூறினர்,

தம்மை அவமதிக்க நினைத்த பிள்ளைக்குத் தகுந்த புத்தி கற்பிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார் பாரதியார். தாமதமின்றி ஒரு வெண்பாப் பாடினர். மூன்றும் அடியின் இறுதியில் 'காந்திமதிநாதனை' என்று வைத்து,

"............காந்திமதிநாதனைப்
பாரதி சினனப் பயல்"

என அதை முடித்தார். 'காந்திமதிநாதனைப் பார்' அ[illegible] சின்னப் பயல்' என்பது பொருள். இதைக் கேட்ட காந்தி

மதிநாத பிள்ளை வெட்கித் தலைகுனிந்தார். பாரதியார் என்ன செய்யப் போகிறாரோ என்று கவலையுடனிருந்த அவருடைய நண்பர்கள், இந்த வெண்பாவைக் கேட்டு அதிக ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தார்கள்.

அடுத்த நாள் தமிழ்ஐயா கேட்ட ஏதோ கேள்விக்குப் பாரதியார் பதில் சொல்லவில்லை. "மேகம்போல் பொழிவதாக ஊரெல்லாம் உன்னைப் பிரமாதமாய்ச் சொல்லுகிறார்களே! காளமேகம் இப்போது பொழியட்டுமே; ஏன் சும்மா இருக்கிறது?" என்று ஐயா இடித்துரைத்தார். ஐயா வாய்மூடுமுன்னே நம் கவி சரியான பதிலுரைத்தார். "ஐயாவுக்கு மேகத்தின் சாதாரண குணமே தெரியவில்லையே! அது தனக்குத் தோன்றியபோதன்றோ பொழியும்? பிறர் வற்புறுத்துகிறார்களென்று எண்ணிப் பொழிவதில்லையே?" என்றார். பையன்களெல்லாம் 'கொல்' என்று நகைத்தார்கள். ஐயா வாயிழந்து போனார்.

பின்பு, பாரதியார் காசியில் இருந்த தம் அத்தை வீடு சென்று, வடமொழி பயின்று, அலஹபாத் சர்வகலாசாலையில் பிரவேசப் பரீட்சையில் முதல்வராய்த் தேறினார். இதுதான் பாரதியாரின் பள்ளிப் படிப்பிலேயே மிக உயர்ந்த பரீட்சை. இதற்குமேல் அவர் எவ்விதப் பள்ளிப் படிப்பும் பயிலவில்லை.

இந்தச் சமயத்தில் எட்டயாபுரம் ஜமீன்தார், பாரதியாரை அழைத்தார். 191-ஆம் வருஷந் தொடங்கி, 1904-ஆம் வருஷம் வரையில், அந்தச் சமஸ்தானத்தில் பாரதியார் உத்தியோகம் பார்த்தார்.

ஒருநாள், சமஸ்தானாதிபதியும் மற்றும் சில பிரமுகர்களும், 'காவடிச் சிந்து' இயற்றிய அண்ணாமலை ரெட்டியாரைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். சிந்து பாடுவது சம்பந்தப்பட்ட மட்டில், ரெட்டியாரை மிஞ்சக் கூடியவர் யாருமே இல்லை என்று தம் காது கேட்க, அவர்கள் கூறியதைப் பாரதியாரால் பொறுக்க முடியவில்லை. அவர் பரிகாசமாக நகைத்தார். "நகைத்துப்

பிரயோசனமில்லை. உங்களால் முடியுமானால், இயற்றுங்கள் பார்க்கலாம்'' என்றார் ஒரு புலவர். "இன்று மாலைக்குள் அவ்வாறே ஒரு சிந்துடன் வருகிறேன்'' என்று சொல்லிச் சென்றார் பாரதியார். சொன்னபடியே சூரியாஸ்தமனம் ஆகுமுன், ஒரு 'சிந்தை' இயற்றி, அரண்மனைக்குக் கொண்டு சென்றார். ஆனால் ஒரு புலவரைக்கூட அங்கே காணவில்லை. "பாரதியாரால் இது எங்கே முடியப்போகிறது!'' என்றெண்ணி, அவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள்.

பாரதியாரின் 'சிந்தைக் கண்ட சமஸ்தானதிபதி, புலவர்களையெல்லாம் உடனே அழைத்தார். ரெட்டியாரின் 'சிந்துக்கு எந்த விதத்தும் சளைத்ததல்ல பாரதியாரின் 'சிந்து' என்று எல்லோரும் ஏகமனதாக மெச்சினார்கள். 'என்னடி நான் பெற்ற மங்கை' என்ற மெட்டில் அமைக்கப்பட்ட அந்தச் சிந்தின் ஒரு சரணம் பின்வருமாறு:

பச்சைத் திருமயில் வீரன்,
அலங் காரன், கௌமாரன் – ஒளிர்
பன்னிரு திண்புயப் பாரன். அடி
பணிசுப்பிர மணியர்க்கருள்,
அணிமிக்குயர் தமிழைத்தரு
பக்தர்க் கெளியசிங் காரன் - எழில்
பண்ணு மஞ்சலத் தூரன்.''

மற்றொரு சமயம் "அட கெடுவாய் பலதொழிலுமிருக்க'' என்ற தனிப் பாடலைக் கேட்டதும், பாரதியாருக்கும் அதேமாதிரி ஒரு விருத்தப்பா வந்துவிட்டது:

"செல்வத்துட் பிறந்தனமா; அது பெறுவா
சிறு தொழில்கள் பயிலவல் லேமா;
வில்வைத்த நுதல் விழியார் கண்டுமய
லுறவடிவ மேவினேமா;

பல்வித்தை யினுமினிய தீங்கானப்
பெருவித்தை பயின்றிட் டேமா:
கொல்வித்தை இருள்வித்தை மருள்வித்தை
பயின்றுமனம் குறைகின் ருேமே!''

சமஸ்தான உத்தியோகத்தில் பாரதியார் நீண்ட நாள் இருக்கவில்லை. பிறவிக் கவிஞரான அவர் ஓர் உணர்ச்சிக் களஞ்சியம். கைகட்டிச் சேவகம் புரிய வேண்டுமென்ருல், அவரால் முடியுமோ? 1904-ஆம் வருஷம் எட்டயாபுரம் சமஸ்தான உத்தியோகத்தைக் கைவிடத் தீர்மானித்தார். சமஸ்தானத்தை விட்டால் குடித்தனத்துக்கு என்ன வழி? முன்கூட்டி அதற்கு எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை. இதைப்பற்றி நண்பர்கள் கேட்டால், "குரங்கு தான் பிடித்த கொம்பை விட்டாலொழிய வேறு கொம்பைத் தாவிப் பிடிக்க முடியாது" என்று கேலி செய்வார். "பழைய கொம்பும் நழுவி, புதிய கொம்பும் எட்டாவிட்டால், குரங்கின் கதி என்ன?" என்று யாராவது வினவினுல், "கீழே விழுந்து மண்டை உடைந்து சாகவேண்டியதுதான்" என்று படீர் என்று அவர் பதிலளிப்பாராம். பாரதியாருக்கு அந்தக் கதி நேரவில்லை. அவர் மதுரை சேதுபதி கலாசாலையில், தமிழ் ஆசிரியராக அமர்ந்தார். அந்தப் பதவியையும் மூன்றே மாதத்தில் உதறிவிட்டு வெளியேறி, சென்னை 'சுதேசமித்திரன்' பத்திரிகாலயத்தில் உதவி ஆசிரியரானுர்.

---

## 4. தேசபக்திக் கனல்

அந்தக் காலத்தில், தமிழ்நாட்டின் தேசபக்த மாணிக்கங்களில் ஒருவரான ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயரிடமே இருந்தது 'சுதேசமித்திரன்' அவரும் பாரதியாரிடம் அன்புகொண்டு, அவரை அபிமானமாய் நடத்திவந்தார்.

பாரதியாரைப் போன்ற ஒரு பிறவிக் கவிஞருக்கு, இயந்திரத்தைப்போல, கண்ட கண்ட செய்திகளை யெல்லாம் மொழிபெயர்க்கும் தினசரிப் பத்திரிகாசிரியர் வேலை எவ்வளவு தூரம் இனித்திருக்க முடியும்? ஆனால், அவர் வெறும் செய்தி மொழிபெயர்ப்போடு நில்லாமல், வெவ் வேறு குறிப்புகளும் எழுதியிருக்கிறார். அவர் ஆபீசுக்குள் நுழைவதே ஒரு கம்பீரம். 'ஏறுபோல் நட' என்பது அவர் உபதேசமல்லவா? ஆபீசுக்குள்ளே போன பிறகு தான் என்ன? இஷ்டப்பட்டால்தான் எழுதுவார்; இல்லா விட்டால் சும்மா உட்கார்ந்திருப்பார். மனம் வந்தால், முத்துப்போன்ற எழுத்துக்களில், பக்கம் பக்கமாக, கருத்துக்கள் செறிந்த கட்டுரைகளையும் குறிப்புக்களையும் எழுதி நிறைத்துவிடுவார்.

'சுதேசமித்திர'னில் இந்தத் தடவை இரண்டரை வருஷமே வேலை பார்த்தார். அதன் பின்பு, நண்பர்களின் வேண்டுகோளின்மேல் திருவல்லிக்கேணி, திருமலாச்சார் என்பவரது அச்சுக்கூடத்தில் 'இந்தியா' என்ற வாரப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்தினர்.

'இந்தியா' என்னும் வாரப்பத்திரிகை நடத்திய காலத்தில்தான் பாரதியாரின் புகழ் தமிழ் நாட்டில் பரவத் தொடங்கிற்று. கவிதையிலும் எழுத்திலும் பேச்சிலும் அவரது வல்லமையைப் பொதுமக்கள் அப்போதுதான் உணர ஆரம்பித்தார்கள். நாட்டி லேயும் அப்போது சுதந்தர இயக்கம் முதன் முதலாகக் கதித்தெழுந்திருந்தது. தமிழ் நாட்டிலே அந்தச் சுதந்திரக்கனலின் ஜ்வாலைக் கொழுந்தாக விளங்கினர் பாரதியார்.

இந்தியாவிலே தோன்றியிருந்த புதிய உணர்ச்சியின் கவிதா சொரூபம் பாரதியார். அவரது 'இந்தியா' பத்திரி கையில் கனல் நிறைந்திருந்தது. உணர்ச்சியும் விகடமும் கேலியும் நையாண்டியும் பக்கத்துக்குப் பக்கம் சிதறிக்

கிடக்கும். கேலிச் சித்திரங்கள் போட முதன் முதல் தொடங்கிய தமிழ்ப் பத்திரிகை 'இந்தியா' தான். தேச பக்தி என்னும் சூரியன் உதிக்கின்றான்; மிதவாத ஆந்தைகள் ஒரு மரப்பொந்தில் ஒளிகின்றன; 'கன்வென்ஷன்' என்ற வெம்புலியைப் பசுத்தோல் போர்த்தது, பாரத மாதாவிடம் மிதவாதி விலை கூறுகிறான்; 'இதுவா பசு!' என்று சவுக்கால் அடிக்கிறாள் அன்னை - இந்த மாதிரியான கேலிச் சித்தரங்கள் இந்தியாவின் முகப்பை அலங்கரித்தன. 'இந்தியா'வில் வெளியான கவிகள், கட்டுரைகள், சித்திரங்கள் யாவும் தேசபக்திக் கனல் சொரிந்தன.

இந்தச் சமயத்தில் வங்காளப் பிரிவினையை எதிர்த்து, தேசமெங்கும் பலத்த கிளர்ச்சி எழுந்தது. அந்தக் கிளர்ச்சியில் ஈடுபட்டு, தமிழ் நாட்டில் தேசிய ஆவேசத்தை ஊட்டி வந்தார் பாரதியார். வங்காளப் பிரிவினையை நிமித்தமாகக் கொண்டு, தேசமெங்கும் கரைபுரண்டெழுந்த சுதந்தர உணர்ச்சி வெள்ளத்துக்கு அணைபோட முயன்றது சர்க்கார். அடக்குமுறை நாகமும் சீறலாயிற்று. வடக்கே லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டார், விபின சந்திரபாலர் சிறையிலிடப்பட்டார். இந்த நிலையில் சூரத் காங்கிரஸ் கூடலாயிற்று. பாரதியாரும், தூத்துக்குடி ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளையும் அடங்கிய சென்னை வாலிபர் கூட்டம் ஒன்று அந்தக் காங்கிரஸுக்குச் சென்றது. மிதவாதிகளுக்கும், லோகமான்ய திலகர் தலைமையில் திரண்ட அமிதவாதிகளுக்கும் ஏற்பட்ட பிளவு அப்போது முற்றியிருந்ததால், சூரத் காங்கிரஸ் கலகத்தில் முடிந்தது. நாடு முழுவதுமே அப்போது, கொதித்துக்கொந்தளித்துக் கொண்டிருந்தது.

---

## 5. புதுவை அஞ்ஞாத வாசம்

1908-ஆம் வருடம் திருநெல்வேலியில் நடந்த குழப்பம் சம்பந்தமாகச் சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவாவும் கைது செய்யப்பட்டார்கள். பாரதியார் 'கோர்ட்டு'க்குச் சென்று அந்த வழக்கில் சாட்சியம் கொடுத்தார்.

'இந்தியா' பத்திரிகையின் பிரசுரகர்த்தரையும் ராஜத் துவேஷக் குற்றம் சாட்டி ஆதிகாரிகள் கைது செய்துவிட்டார்கள். பாரதியாரே அதன் ஆசிரியராதலால் அவருக்கும் அடுத்தபடியாக 'வாரண்ட்' பிறக்கலாம் என்று தோன்றியது. இந்த நிலையில் என்ன செய்வது என்று பாரதியார் தம் நண்பர்களைக் கலந்து ஆலோசித்தார். "பாரதியாருக்குத் தேச பக்தர், கவிஞர் என்ற இரண்டுவகையிலும் பெருமை. அவரது சிறைத் தொண்டைக்காட்டிலும் கவிதைத் தொண்டு உயர்ந்ததாகும். அவர் சிறை செல்லுவது உசிதமல்ல" என்று நண்பர்கள் சொன்னார்கள். எனவே, அவர் பிரிட்டிஷ் இந்தியாவையே விட்டு, எங்கேயாவது ஓடி, அஞ்ஞாத வாசம் புரியலாமென்று துணிந்தார். அந்தச் சமயத்தில் நண்பர்கள் அவருக்கு ஒரு யோசனை கூறினார்கள். புதுச்சேரி அந்நிய ராஜாங்கமாகையால், அங்கே சென்று பகிரங்கமாக ஒரு பயமுமின்றி வசிக்கலாம் என்றார்கள். அதற்கு இசைந்து, சிட்டி குப்புசாமி ஐயங்கார் என்பவருக்கு, தம் நண்பர் ஒருவர் கொடுத்த கடிதத்தோடு பாரதியார் புதுவை சென்றார். புதுவை நகர் அதுவரையில் கடன்பட்டுத் திண்டாடுவோருக்குப் புகலிடம் என்ற பெயர்தான் பெற்றிருந்தது. பாரதியார் அங்கே சென்றதிலிருந்து அதனுடைய பெருமை அதிகரித்தது. அங்கே சரண் புகும் அரசியல்வாதிகளைப் பிரிட்டிஷ் இந்திய சர்க்கார் ஒன்றும் செய்ய இயலாது என்னும் விஷயம், பாரதியார் அங்கே

சென்று தங்கினதிலிருந்துதான் இந்தியா முழுவதும் தெரியவந்தது. இரண்டு வருஷங்களுக்குப் பிறகு ஸ்ரீ அரவிந்தர் அங்கே வந்து தங்கியதற்கும் இதுவே காரணம் என்றுகூடச் சொல்லுகிறார்கள்.

பாரதியார் புதுவை சென்ற செய்தி சென்னைப் போலீஸாருக்கு எட்டிவிட்டது. இருந்தாலும், அது தங்களுக்குத் தெரிந்ததாக அவர்கள் காட்டிக்கொள்ளவில்லை. ஆனால், பாரதியாரின் நடவடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருக்க ஒரு வேவுகாரர் படையை மாத்திரம் புதுவைக்கு அனுப்பிவிட்டார்கள். பிரிட்டிஷ் சர்க்காருக்கு விரோதமாகப் பாரதியார் ஏதாவது சதி செய்கிறாரா என்று கவனித்து ரிப்போர்ட் செய்வதுதான் இந்தப் போலீஸ் வேவுகாரரின் கடமை. ஆனால், பொதுவாகவே, இந்த வேவுகாரர்கள், தங்கள் காரியத்தோடு அமைந்து கிடப்பதில்லை. தாங்களே பிரிட்டிஷ் சர்க்கார் போல, ஏதாவது மிரட்டிக்கொண்டு, கல்லல் செய்வது இவர்கள் வழக்கம். பாரதியாரைக் கவனித்துக்கொள்ள அனுப்பப்பட்ட வேவுகாரர்களும் இதேமாதிரிதான் நடந்துகொண்டார்கள். பாரதியாருக்குப் புகலிடம் அளித்த குப்புசாமி ஐயங்காரிடம் சென்றார்கள். "அவரை வைத்துக்கொண்டிருந்தீரானால், உமக்கு ஆபத்து வரும். அவர் எங்கேயாவது போகட்டுமே, உமக்கு என்ன? வெளியே அனுப்பிவிடும்" என்று நயமாகவும் பயமாகவும் மிரட்டிப் பார்த்தார்கள். ஐயங்கார் மிகவும் சாதுவாகையால், பயந்துபோய், பாரதியாரிடம் தமது தர்ம சங்கட நிலைமையைத் தெரிவித்தார். "இரண்டொரு நாட்களில் வேறிடம் பார்த்துக்கொண்டு போய்விடுகிறேன். அது வரையில் மட்டும் பொறுத்துக்கொள்ளுங்கள்" என்று அவருக்குச் சமாதானம் சொன்னார் பாரதியார்.

ஆனால், எங்கே போவது? முன்பின் தெரியாத புதுவையில் என்ன செய்வது? இப்படிப் பெருங் கவலையில்

ஆழ்ந்த முகத்துடன், அன்றிரவு திண்ணையில் உட்கார்ந்திருந்தார் பாரதியார். *குவளை கிருஷ்ணமாச்சாரியார் என்பவர், அச்சமயம் தெருவிலே சென்றார், இருவரும் கொஞ்சநேரம் சம்பாஷித்தார்கள். குவளை கிருஷ்ணமாச்சாரியாருக்கு இவரிடம் பற்றுதல் உதித்தது. பாரதியாரை, சுந்தரேசையர் என்ற ஒரு நண்பரிடம் சேர்த்தார். இந்தக் குவளை கிருஷ்ணமாச்சாரியாரைப் பற்றித்தான், 'பாரதி அறுபத்தாறு' என்ற நீண்ட பாட்டுக்கிடையே, "குவளைக் கண்ணன் புகழ்" என்ற தலைப்பில் பாரதியார் சில வரிகள் பாடியிருக்கிறார்.

சுந்தரேசையர் தெலுங்கர்; பணக்காரர் அல்ல. ஒரு மணிலாக்கொட்டை வியாபார ஸ்தலத்தில் குமாஸ்தா வேலையிலிருந்தார். சம்பளம் மிகச் சொற்பந்தான். இதில் தம் சொந்தக் குடும்பம் வேறே. தம் சொந்தக் குடும்பத்தையே ரட்சிக்கக்கஷ்டப்பட்டவர். இதோடு பாரதியையும் ரட்சிக்க அவர் ஏற்றுக்கொண்டது பேராச்சரியமாகும். அவர் தம் சொந்த வீட்டுச் சாமான்களையும், மனைவியின் நகைகளையுங்கூட அடகுவைத்துப் பாரதியாருக்குப் பணம் கொடுத்துள்ள சமயங்கள் அனந்தம் என்று சொல்லுகிறார்கள். புதுவையிலே பாரதியாருக்கு முதன் முதலில் புகல் அளித்துப் பெரும் பெருமையை அவர் அடைந்தார்.

சென்னையில், பாரதி அன்பர்களின் ஒருவரான ஸ்ரீ சீனிவாஸாச்சாரியார் என்பவருக்கு, புதுவை சென்று பாரதியாருடன் கொஞ்ச காலம் வசிக்க வேண்டுமென்று ஆசை யுண்டாயிற்று. அவரும் அங்கே சென்றார். அவர் சிறு வயதில் புதுவையில் படித்தவராகையால், அங்கிருந்த பலரை அவருக்குத் தெரியும். அவரும் வந்துசேர்ந்த

* 1-9-39-இல் காலகதி யடைந்தார்.

பிறகு, இனி என்ன கஷ்டம் வந்தாலும் சமாளித்துக் கொள்ளலாம் என்ற தைரியம் பாரதியாருக்கு உண்டாயிற்று.

---

## 6. வறுமையும் துன்பமும்

இதற்குள் சென்னையில் ராஜத்துவேஷ வழக்கு சம்பந்தமாய் ரிமாண்டிலிருந்த ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயருக்காகச் சில பெரிய மனுஷர்கள் குறுக்கிட்டுச் சர்க்காரோடு மன்றாடி, அவருக்கு மன்னிப்பும் விடுதலையும் பெற்றுக்கொடுத்தார்கள். அதேமாதிரி பாரதியாரும் மன்னிப்புக் கேட்க ஒப்புக்கொண்டால், பலரைக்கொண்டு அவருடைய விடுதலைக்கும் முயற்சி செய்வதென்று தீர்மானித்து, பாரதியாரின் மாமனூர் செல்லப்பையரும், மைத்துனர் அப்பாத்துரையும் புதுவைக்கு வந்தார்கள். அதற்குப் பாரதியார் சிறிதும் இடம் கொடுக்கவில்லை.

"இங்கே நான் என்ன கஷ்டப்படுகிறேன்? அங்கே வந்து நான் என்ன சுகப்படப்போகிறேன்? அங்கே யானால் எந்த வேளையில் போலிஸ் என்ன செய்யுமோ என்று திகில் பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். இங்கே இந்த அழகிய பங்களாவில் நான் சுகமாக இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையா? என்று கூறி விட்டார் பாரதியார்.

சென்னை வழக்கு நடந்து வந்தாலும் இந்தியா பத்திரிகை தப்பாமல் வெளிவந்துகொண்டே யிருந்தது. ஆயினும், பாரதியார் புதுவை சென்ற ஒரு மாதத்துக்குள் இந்தியா பத்திரிகையின் சொந்தக்காரரான ஸ்ரீ ந. திருமலாச்சாரியாரும் அங்கே வந்துசேர்ந்தார். அவர் தமது பத்திரிகையைச் சென்னையிலிருந்து புதுவைக்கே கொண்டு வந்து நடத்துவதென்ற தீர்மானத்தோடு வந்தார். சென்னையிலிருந்தால் அதற்கு நித்திய கண்டமாயிருக்கும்;

இங்கே பாரதியாரும் இருப்பதனல் அது ஒழுங்காக நடக்கக்கூடும்' என்று அவர் எண்ணினர். பாரதியாரும் அவை ஆமோதித்தார். பிரெஞ்சுச் சட்டப்படி புதுவையில் ஒரு பத்திரிகை நடத்தவேண்டுமானல், அதற்குப் பொறுப் பாளியாகப் பிரெஞ்சு இந்தியக் குடி ஒருவர் இருந்தாக வேண்டும். வில்லநல்லூரில் வசித்துவந்த ஸ்ரீ எஸ். லக்ஷ்மிநாராயணையர் என்பவர் அந்தப் பொறுப்பை ஏற்க ஒப்புக்கொண்டார். ஸ்ரீ திருமலாச்சார் சென்னையில் வைத்திருந்த அதே அச்சுக்கூடத்தின் சாமான்கள் புதுவை போய்ச் சேர்ந்தன. இந்தியா, முன்னைவிட அருமையாய், நிர்ப்பயமாய், புதுவையிலிருந்து வெளிவர லாயிற்று. பாரதியாருக்கு அப்போதுதான் சற்று நிம்மதி யுண்டாயிற்று. ஆனல், இது வெகுகாலம் நீடிக்கவில்லை. 1909-ஆம் வருஷம் 'இந்தியா' பிரிட்டிஷ் எல்லையில் வரக் கூடாதென்று தடை கசய்யப்பட்டதால் நின்றுபோய் விட்டது. அதன் பின்பு அரவிந்தர் நடத்திய அரிய ஞான-வீர மலராகிய 'கர்மயோகி'யைத் தமிழில் மொழி பெயர்த்துச் சில காலம் வெளியிட்டார் பாரதியார்.

'இந்தியா' நின்றுவிட்ட பிறகு, பாரதியாருக்குப் புதுவை வாசம் சற்றும் களிப்பாயில்லை. மனத்திலே சஞ்சலம், தீராத பணக்கஷ்டம், வாழ்விலே ஏமாற்றம். இத்தனையும் சேர்ந்து வேதனைப்பட்டார். புதுச்சேரியா? அது நரகமல்லவா?" என்று அவரே பிற்காலத்தில் கூறி னராம். பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதி அதன் மூலம் வந்த வருவாயைக் கொண்டு குடும்ப நிர்வாகம் நடத்துவதென்ற சங்கதி, இன்று கூடத் தமிழ்நாட்டில் சாத்தியமல்ல. பரதியார் காலத்தில், இவ்வளவு பத்திரி கைகள் மல்கியிருக்கவுமில்லை. அப்போது இது சாத்தியமா யிருந்திருக்க முடியுமா? 'சக்திதாஸன்,' 'காளிதாஸன்' என்ற புனைபெயர்களுடன் 'சுதேசமித்திரன்' முதலிய பத்திரிகைகளுக்கு அவர் கட்டுரைகள் எழுதிவந்தார்.

அதனால் கிடைத்த வருவாய் காலட்சேபத்துக்குக்கூடக் கட்டவில்லை. நண்பர்களின் உதவியைத்தான் எவ்வளவு தூரம் எதிர்பார்த்துக்கொண்டு இருக்கமுடியும்? கடன் உபத்திரவமும் பிற கஷ்டங்களும் அவரை வருத்திக் கொண்டேயிருந்தன. புதுச்சேரி ஒரு சிறை, நரகம் என்று அவர் பிற்காலத்தில் வர்ணித்தாரென்றால், அதில் ஆச்சரியம் என்ன?

ஆனால், புதுவை வாழ்க்கையைப் பாரதியாரின் ஜீவியத்திலே மிக முக்கிய காலமாகக் கொள்ளவேண்டும். புதுவையிலேதான், அவருடைய தேசிய கீதங்களுக்குப் பதில், உருக்கமான ஸ்தோத்திர கீதங்களும் வேதாந்த-இலக்கிய ரசனைக்கவிதைகளும் அதிகமாய் உதிக்கலாயின. அங்கேதான், பாபு அரவிந்தகோஷ், ஸ்ரீ வ. வெ. சு. ஐயர் ஆகிய இரண்டு மகா புருஷர்களின் நெருங்கிய தோழமையும் அவருக்கு ஏற்பட்டது. புதுவை சென்ற வ. ரா. போன்ற புத்திமான்களும் புதுவை வாசிகளான 'பாரதி தாஸன்' போன்ற, அன்பர் கோஷ்டியொன்றும் அங்கேதான் அவருடைய நேசர்களானார்கள். பாரதியாரின் வாழ்க்கையில் கனிவும் பக்குவமும் ஞான முதிர்ச்சியும் அனுபவத் திண்மையும் வேதாந்த திருஷ்டியும், புதுவை வாழ்க்கையின் கஷ்டங்களுக்கு நடுவில்தான் விகசிக்கலாயின. அவரது ஜீவிய சரித்திரத்திலே உருக்கமும். உத்தம குணஒளியும் பொழிந்த பல ரஸமான சம்பவங்களும். புதுவையில் அவருடன் பழகும் பாக்கியம் பெற்ற நண்பர்களிடமிருந்துதான் பெரும்பாலும் இன்று நமக்குக் கிடைக்கின்றன.

## 7. உத்தமர் உறவு

புதுவையில் பண நெருக்கடிக் காலங்களில் பாரதியாருக்கு உற்ற துணைவர்களாயிருந்து சலிக்காமல் பண உதவி செய்தவர்களில் இருவர் பெயரை முதன்மையாகக்

குறிப்பிட வேண்டும். ஒருவர், "முத்தியாலுப்பேட்டைக் கிருஷ்ணன்" என்று வழங்கப்பட்ட ஸ்ரீ வெ. (வெல்லச்சு) கிருஷ்ணசாமிச் செட்டியார். மற்றவர் ஸ்ரீ சுந்தரேசையர். இந்த நண்பர்களிடம் பாரதியாருக்கு அளவற்ற நன்றி உண்டு. இதற்கு ஒரு சிறிய உதாரணம் வருமாறு:

சுந்தரேசையரை, பாரதியார் 'குவளை ஐயர்' என்று செல்லமாகவே எப்போதும் அழைப்பார். ஒரு சமயம் அவருக்கும் பாரதியாருக்கும் ஏதோ பேச்சினால் மனஸ்தாப முண்டாகிவிட்டது. ஒருவரை ஒருவர் பார்ப்பதுகூட நின்றுவிட்டது.

இந்தவிதமாக இரண்டு மாத காலம் கழிந்தது. பாரதியாருக்குத் தம் ஆருயிர்த் தோழர் 'குவளை ஐயரின்' பிரிவாற்றுமை பொறுக்கவில்லை. குவளை போன்ற சகபாடிகளிடம், "குவளை ஐயர் எங்கே? நான் அவர் வீட்டுக்குப் போனால்கூட அவரைக் காணமுடிவதில்லையே" என்று வருந்தி முறையிட ஆரம்பித்தார்.

அதன்பிறகு, நண்பர்களின் முயற்சியால் இருவருக்கும் சமரசம் ஏற்பட்டது. பாரதியார் தம் நண்பரை மீண்டும் சந்தித்த உடனே அப்படியே உள்ளம் பொங்கிக் குதூகலித்தவராய், "எங்ஙனம் சென்றிருந்தீர்" என்ற அற்புதமான 'ஸரஸ்வதி ஸ்தோத்திர'ப் பாடலைப் பாடிவிட்டார் என்று சில நண்பர்கள் சொல்லுகிறார்கள். பாடல் 'ஸரஸ்வதி ஸ்தோத்திரம்'போல அமைந்திருந்தாலும், தம் அருமை நண்பரின் பிரிவாற்றுமைக் கலிதீர்ந்த ஆனந்தத்தை, அந்தப் பாடலின் தொனியிலே நாம் காணலாம் என்பது அவர்கள் கருத்து.

பண நெருக்கடிக் காலத்தில் மாத்திரமல்ல, போலீஸ் உபத்திரவ காலங்களில் அவருக்குப் புகலளித்த உற்ற துணைவர்களும் அங்கே பலருண்டு. அவர்களில் முக்கியஸ்தர்களாக மூன்று பேர்களைச் சொல்லவேண்டும். ஒருவர்

சுந்தரேசையர், இன்னும் ஒருவர் கலவை சங்கரன் செட்டியார், மற்றொருவர் பொன்னு முருகேசம் பிள்ளை.

என்னதான் பணக் கஷ்டமும் முடையும் இருக்கட்டுமே; பாரதியாருக்குத் தரித்திர மனோபாவம் மட்டில் இடையவே கிடையாது. எதிலும் பெருந்தராவாகத்தான் நடந்துகொள்வார்.

வீடா? பெரிய வீடாய்த்தான் வாடகைக்குப் பிடிப்பார். கொடுப்பதிலோ கர்ணன் மாதிரிதான் தாராளம்.

வீட்டுக்காரர் ஒரு கிழச் செட்டியார். தங்கமானவர். 'விளக்கெண்ணெய்ச் செட்டியார்' என்று அவருக்கு ஒரு கேலிப் பெயர். .வ. ரா. முதன் முதலாகப் பாரதியாரைக் கண்ட சமயத்தில் செட்டியாரும் பாரதியாரிடம் வந்தாராம்.

"செட்டியாரே! வாடகைக்கு என்ன அவசரம்? நல்ல பதவிக்காக ஜன்ம ஜன்மமாய்க் காத்திருக்கலாம் என்ற ஹிந்து பரம்பரையிலே நீர் பிறந்தவராயிற்றே! இன்னும் பத்து வருஷத்துக்குள் சுயராஜ்யம் வரப் போகிறது. அந்த ராஜாங்க கஜானாவுக்கு ஒரு 'செக்' கொடுக்கிறேன். வாங்கிக்கொள்ளுமே!" என்று சொல்லிப் பாரதியார் நகைத்தார்.

செட்டியாரும் மகா உத்தமன் அல்லவா? "மகான்! உங்கள் உண்டியல் ஏன் செல்லாது? கூசாமல் கொடுங்கள். வாங்கிக்கொள்ளுகிறேன்" என்று மெல்லச் சொன்னார்.

"செட்டியாரே உமக்கு நூறு வயசு, போம். பணம் வந்தவுடனே, ஒரு விநாடிகூடத் தாமதிக்காமல் அனுப்பி வைக்கிறேன்" என்றார் பாரதியார்.

செட்டியார் வணக்கத்துடன் மறைந்தார்.

பெரிய வீடாய்த்தான் வாடகைக்குப் பிடித்திருக்கிறாரே. ஆனால், வீட்டிலே தங்குவாரோ? அது மிகவும் அபூர்வம். ஒருநாள் வ. வெ. சு. ஐயர், "நீங்கள்தான்

வீட்டில் இருப்பதே இல்லையே. எதற்கு அத்தனை பெரிய வீடு?" என்று பாரதியாரைக் கேட்டார்.

"சின்ன வீடு எனக்குப் பிடிப்பதில்லை. வீட்டுக்கார 'விளக்கெண்ணெய்ச்' செட்டியாருக்கோ வாயிதா எட்டு மாதம் வரை சொல்லலாம்!" என்றார் பாரதியார்.

"வீட்டிலாவது சுகமாக இருக்கக்கூடாதா?, ஏன் இப்படி வெயிலில் அலைகிறீர்கள்?" என்று ஐயர் கேட்டார்.

பாரதி, "வீட்டில் சுகமாக இருக்கலாம். ஆனல், மூட்டைப்பூச்சிக் கடி, ஈக்கடி, எறும்புக்கடி......" என்று அடுக்கிக்கொண்டே போனார்.

ஐயர், "கடன்காரர் கடியும் இதில் சேர்ந்ததுதானே?" என்று கேலியாகக் கேட்டார்.

அதற்குப் பாரதியார் உரக்கச் சிரித்துக்கொண்டே, "உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும், அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே!" என்று பாடத் தொடங்கிவிட்டார்.

புதுவை வாழ்விலே, பாரதியார் அரவிந்தருடன் நெருங்கிப் பழகி, ரிக்வேதத்தை அவருடன் கூடவே படித்துப் பயின்றார். அரவிந்தரிடம் பாரதியாருக்குப் பேரன்பு. திலகருக்கும் மற்றும் பல தேசியத் தலைவர்களுக்கும் பாமாலை சூட்டியது போலவே அரவிந்தர் மீதும் பாடல் புனைந்துள்ளார். அரவிந்தர் முன்னிலையில், அன்பர்களின் துயரெல்லாம் ஒழியும் அற்புதத்தை வெகு அழகாக அதில் பாரதியார் பின்வருமாறு வர்ணித்திருக்கிறார்:—

"ஆதி சிவன் மேலிருக்கும் நாகப் பாம்பே-எங்கள்
அரவிந்தப் பேர்புனைந்த அன்புப் பாம்பே!
ஜோதிப்படந் தூக்கிநடமாடி வருவாய்-அந்தச்
சோலைநிழ லாலெமது துன்ப மொழிவோம்!"

'பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ? பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ?' என்று மனங்

கலங்கி வாழ்ந்து கொண்டிருந்தாலும், அரவிந்தர், ஐயர் போன்ற உத்தமர்களின் கூட்டுறவால் ஓர் ஆறுதல் பெற்று, இவ்வாறு சுமார் பத்து வருஷங்களைப் பாரதியார் புதுச்சேரியில் கழித்தார். என்றாலும், 'நரகம்' என்று வெறுக்கும்படி அவருக்குத் தோன்றிய அந்தக் கஷ்ட வாழ்வை எவ்வளவு நாள்தான் அவரால் சகிக்க முடியும்? 1918-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் அவர் தாமாகவே பிரஞ்சு எல்லையை விட்டு வெளியேறிப் பிரிட்டிஷ் இந்தியாவுக்கு வந்தார்.

---

## 8. மீண்டும் பிரிட்டிஷ் இந்தியா

பாரதியார் கால் அடிவைத்ததுதான் தாமதம். கடலூரில் அவரைப் பிரிட்டிஷ் இந்தியப் போலீசார் கைது செய்தார்கள். ஆயினும், அவர்மீது எவ்விதக் குற்றமும் சாட்டி வழக்குத் தொடரமுடியாமற்போலவே, விடுதலை செய்யப்பட்டார்.

பின்பு, திருநெல்வேலி ஜில்லா அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த கீழைக்கடையம் சென்று, அங்கேயே கொஞ்ச காலம்வரை வசித்துவந்தார்.

கிராமத்திலே ஒரு சமயம் அவர் சமபந்தி போஜனம் செய்துவிட்டார். ஊரார் வெகுண்டு கட்டுப்பாடு செய்தார்கள். பாரதியாரை விட்டு அவருடைய சொந்த மனைவி மக்களையும் குடும்பத்தையுமே பிரித்துவிட்டார்கள். அந்த இன்னல்களையெல்லாம் அனுபவித்த போது, அவர் உள்ளம் எப்படித் தவித்ததோ! மக்களின் மூடத்தனத்தை எண்ணித்தான் மனம் புழுங்கினாரோ!

புதுவை வாழ்வை, 'நரகம்' என்று நினைத்த அவருக்கு அதுவே சொர்க்கம் என்றுதான் இப்போது தோன்றிற்றோ என்னவோ!

1920-ஆம் வருஷம் வரையில்தான் இப்படிக் கிராமத்திலே அடைத்துக் கிடந்தார். பிறகு, மீண்டும் சென்னைக்கு வந்து, 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராய் அமர்ந்தார்.

அப்போது ஆசிரியராயிருந்த ஸ்ரீ ஏ. ரங்கசாமி ஐயங்காரும், பாரதியாரிடம் சற்றுச் சலுகையாகவே நடந்துவந்தார். புதுவையிலிருந்த காலம் முதலே, இவர் என்ன எழுதினாலும் சரி, எழுதாவிட்டாலும் சரி, இவருக்கு மாதம் முப்பது ரூபாய் 'மித்திரன்' ஆபீஸிலிருந்து அனுப்பிவர ஐயங்கார் ஏற்பாடு செய்தார். மீண்டும் இவரை ஆபீஸிலேயே ஏற்றுக்கொண்டார். பாரதியாருக்கும் ஸ்ரீ ஐயங்காரிடம் நல்ல மதிப்புத்தான்.

ஒரு சமயம் பாரதியார் ஆபீஸிலிருந்து வந்துகொண்டிருந்தார். அப்போது அவருடைய ஆப்த நண்பரான குவளைக் கண்ணனைச் சந்தித்தார். இருவருக்கும் நடந்த பின்வரும் சம்பாஷணையைக் குவளைக்கண்ணனே ஓரிடத்தில் கூறியிருக்கிறார்.

"தங்களுக்கு எவ்வளவு சம்பளம்?" என்று விசாரித்தார் குவளைக்கண்ணன்.

பாரதி: "80 அல்லது 100 ரூபாய்."

குவளை: "ஏ. ரங்கசாமி ஐயங்காருக்கு எவ்வளவு சம்பளம்?"

பாரதி: "அவருக்கு மாதம் 1,000 ரூபாய்."

குவளை: "தமிழ்ப் பாஷையில் தங்களைவிட அவர் கெட்டிக்காரரா, என்ன? உங்களுக்கு மாத்திரம் என்ன 100. அவருக்கு மாத்திரம் என்ன 1,000?"

பாரதி: "தமிழ்ப் பத்திராதிபருக்கு மாதம் 1,000 ரூபாய் சம்பளம் என்ற காலம் வந்தது பார்த்தாயா! அது கணக்கே தவிர, எனக்கு, அவருக்கு என்ற கணக்கில்லை."

சிறிதும் அசூயையற்ற அவ்வளவு தங்கமான மனது பாரதியாருக்கு.

## 9. பிரிவு

வேதாந்த சமரச தத்துவத்திலும், குழந்தையைப் போல் நிஷ்களங்கமான பற்றுதல் அவருக்கு வலுத்திருந்தது.

"காக்கை குருவி எங்கள் ஜாதி - நீள்
கடலுமலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்"

என்று பாடியுள்ள பாரதியார், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானையையும் தம் சகோதரனாகவே பாவித்துவிட்டார். அவர் தினந்தோறும் கோயிலுக்குச் செல்லும்போது, தேங்காய். பழம் முதலிய நைவேத்திய வஸ்துக்களை வாசலிலுள்ள யானைக்கே அர்ப்பணம் செய்துவிட்டு, உள்ளே வெறுங்கையுடன் போய்ச் சுவாமி தரிசனம் செய்து திரும்புவார். அர்ச்சகர் தின்பதைவிட பரம்பொருளின் மற்றொரு வாயில்லா உருவமான யானை தின்பது மேல் என்பது அவர் அபிப்பிராயம். ஒருநாள் யானைக்கு மதம் பிடித்துவிட்டது. பாகனும் பிறரும் எச்சரித்ததைக் கேளாமல், "யானைச் சகோதரா!" என்று அழைத்துக்கொண்டு, வழக்கம்போல நைவேத்திய சாமான்களை அதனிடம் சமர்ப்பித்தார். அவரது உன்னத வேதாந்த மனோ நிலையைப் புரிந்துகொள்ளாத யானை, துரும்புபோல் இளைத்துத் தூர்ப்பல மடைந்திருந்த அந்தப் புனித உடம்பைத் துதிக்கையால் தள்ளிவிட்டது. அதுவே வியாஜமாய், நோய்ப் படுக்கையில் விழுந்த பாரதியார், அந்த அதிர்ச்சியினின்றும் மீளாமல், 1921-ஆம் வருடு செப்டம்பர் மீ 11௳ இரவு சுமார் 1-30 மணிக்குச் சென்னை திருவல்லிக்கேணி தொளசிங்கப் பெருமாள் கோயில் தெரு, 67-ஆம் இலக்கமுள்ள வீட்டில் இவ்வுலகைத் துறந்தார்.

# இரண்டாம் பாகம்

# 1. குணாதிசயம்

ஒரு மேதாவிக்குரிய சகல குணங்களும் லட்சணங்களும் பாரதியிடம் அமைந்திருந்தன. அவருடைய வாழ்க்கைச் சம்பவங்கள் சிலவற்றை நண்பர்களிடமிருந்து கேட்கும்போது, பாரதியின் உள்ளம் எவ்வளவு புனிதமானது என்பதைக் காண்போம்.

அவர் ஓர் உணர்ச்சிக் களஞ்சியம். அவருடனும், ஸ்ரீ வ. வெ. சு. ஐயருடனும் புதுவையில் நெருங்கிப் பழகும் பாக்கியம்பெற்ற வ. ரா. கூறும் ஒரு சம்பவத்தைக் கேட்போருக்கு, இதன் உண்மை புலனாகும்.

ஸ்ரீ ஐயரும், பாரதியாரும் சதுரங்கம் ஆடுவது உண்டாம். ஸ்ரீ ஐயர் போர்வீரர்களின் தளபதியா யிருக்கத் தக்க நெஞ்சுரம் படைத்த வீரர். பாரதியாரோ, இருளையும் ஒளியாய் மாற்றும் மந்திர சக்தியை வேண்டும் உணர்ச்சியுள்ள கவிதைக் களஞ்சியம். தம் சதுரங்கக் காய்களைத் தாம் நடத்திச்செல்லும் படைவீரர்போல் மதிப்பார் ஐயர். தம் காய்களைத் தம் சொந்தக் குழந்தைகளைப்போல் பாவிப்பார் பாரதியார். ஐயர் தம் காய்களைப் பலிகொடுத்து, எதிரியை மடக்க முடியுமானால், அதற்குத் தயங்கமாட்டார். எதிரியின் காய்களைச் சாடவும் பின் வாங்க மாட்டார். பாரதியாருக்கோ, இரண்டுக்கும் மனம் துணியாது. மடமடவென்று பாரதியாரின் காய்களை, ஐயர் வெட்டிச் சாய்த்துவிடுவார்.

பாரதியார் குழந்தைகளைப் பறிகொடுத்த தாய்போல, நெஞ்சங் கலங்கி, "அட பாவி! இப்படியா ஈர இறக்கமின்றி வெட்டுவது! உமது நெஞ்சென்ன கல்லா, இரும்பா!" என்று குமுறத் தொடங்குவார்.

ஐயரோ, கொஞ்சமும் அமைதி குலையமாட்டார். "ஏங்காணும், சண்டை முகத்திலே ஒப்பாரி ஏது ஐயா?" என்று சொல்லிவிடுவார்.

ஐயருக்கு வீர வுணர்ச்சியே மேலோங்கி நிற்கும். பாரதியாருக்கோ கருணை உணர்ச்சிதான் தலைதூக்கி நிற்கும்.

பாரதியார் எல்லோரையும் ஒன்ருகப் பாவிப்பார்; வித்தியாசம் காணத் தெரியாது. சில சமயம் ஐயரின் வீட்டுக்குச் செல்லும்போது, அங்கே கோட் ஸ்டாண்டில் இருக்கும் துணிகளில் ஏதேனும் தமக்கு வேண்டுமென ஆசை உண்டானுல், அதை எடுத்து, தாம் அணிந்து, கண்ணுடி எதிரில் நின்று குழந்தைபோல் அழகு பார்த்துக் கொண்டு, "ஐயரே! இது எனக்கு நன்ருயிருக்கிறது. எனக்குத்தான்; கொடுக்கமாட்டேன்" என்று சொல்லி விடுவாராம். அவ்வளவு கபடமற்ற தன்மை வாய்ந்தவர் பாரதியார்.

பிறர் மனம் நோகும்படி நடக்க அவருக்கு மனம் வராது. பாரதியாரின் இரண்டாம் பெண் சகுந்தலா குழந்தையா யிருந்தபோது, குஷ்டரோகியான தேசபக்தர் ஒருவர் பாரதியாரின் வீட்டுக்கு வந்திருந்தாராம். அவர் குழந்தை சகுந்தலாவை மடியில் தூக்கி வைத்துக்கொண்டு விட்டாராம்.

பாரதியாருக்கு இந்தமாதிரி நோய்களைக் கண்டாலே பெருங் கிலி. என்ருலும், நேரிலே அந்தத் தேசபக்த ரிடம் ஒன்றும் சொல்லமாட்டாதவராய்த் தவித்துக் கொண்டிருந்துவிட்டு, அவர் போனபிறகு, பலவிதமாய்ச் சுத்தஞ்செய்யத் தொடங்கினுர்!

குழந்தை சகுந்தலாவை 'லோஷன்' ஜலத்தில் குளிப் பாட்டினுர். தேசபக்தர் அமர்ந்திருந்த நாற்காலிக்கு மண்ணெண்ணெய் அபிஷேகம் நடந்தது. அவர் காபி சாப்பிட்ட லோட்டா தெருவீதிக்குப் பறந்தது. ஆனுல், வீதியில்போன யாரோ அதை எடுத்துவந்து பாரதியாரின் மனைவியிடம் கொடுத்துவிட்டார்கள். அந்த அம்மாள் மூச்சுவிடாமல் லோட்டாவை வாங்கி உள்ளே வைத்தார்.

லோட்டா, பாரதியார் கண்ணுக்குப் பட்டதும் திரும்ப வும் தெருவீதியை யடைந்தது. எறியப்பட்ட லோட்டா எப்படியோ மீண்டும் மீண்டும் வீடேறி வந்துகொண் டிருந்தது. இது பாரதியாருக்குப் பிடிக்கவில்லை. ஆகை யால், அதைக் குழிதோண்டிப் புதைத்து வெளிக் கிளம் பாமல் செய்யவேண்டுமென்று, தம் வீட்டாருக்குக் கண்டிப்பாக உத்தரவு போட்டுவிட்டார்.

பாரதியாருக்கு, தாம் பேசும் பேச்சு, சொல்லும் தத்துவங்கள் எல்லாம் வாழ்க்கை சம்பந்தப்பட்டவை யல்லபோல நடக்கத் தெரியாது. உயர்ந்த தத்துவங்கள், கொள்கைகள், வேதாந்த உண்மைகள் ஆகிய தாம் நம்பும் எல்லாவற்றையும் அவர் தமது வாழ்க்கையிலேயே கடைப் பிடித்துவிட வேண்டுமென்ற ஆர்வம் படைத்தவர். அத னால்தான் அவருடைய செய்கைகள், லௌகிகச் சமர்த்தர் களைப்போல் இல்லாமல் சில சமயம் கொஞ்சம் விசித்திர மாயும் விபரீதமாயும் தோன்றும். எந்த உயர்ந்த வித்தை யானாலும் சரி, சாஸ்திரமானாலும் சரி, அதைப் பரம ஊக் கத்துடன் பயின்று, அனுபவத்தில் அனுஷ்டித்து விடு வதிலே ஆஸ்தையுடையவர் பாரதியார். ஆனால், எதை யும் சொந்த புத்திக்குப் படுகிறவாறே பயில விரும்புவார்.

ஒரு சமயம் பாரதியார் கத்தி வித்தை கற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்பினாராம். நல்ல நிலவு வெளிச்சத்தில் நண்பரொருவர் பாரதியாரைச் சமுத் திரக் கரைக்கு இட்டுச் சென்று, கையில் பட்டாக் கத்தி யைக் கொடுத்து, அதைச் சுழற்றும் வழியைக் கற்பிக்கத் தொடங்கினர்,

கையில் பட்டாக்கத்தி வந்ததும் நிமிர்ந்து நின்று, மரக் கட்டைபோல் நேராகக் கையை நீட்டி, வாளைப் பிடித்து, ''இதற்குப் பதில் சொல்'' என்று கேட்பவர்போல், பாரதி யார் தோன்றினாராம். அவரது முகம் காளிதேவியைப் போல் உக்கிரமாய்க் காணப்பட்டது. ''கத்தியைச் சுழற்ற

வேண்டும்'' என்றாராம் நண்பர். "உனக்கொன்றும் தெரியாது. கையில் கத்தி இருக்கையில் கை வளையுமோ? இப்படித்தான் ஒரே வெட்டாய் வெட்டித் தள்ள வேண்டும்'' என்று கையை ஓங்கினாராம் பாரதியார். அவர் கையிலிருந்து கத்தியைத் திரும்ப வாங்குவது பிரம்மப் பிரயத்தனமாகி விட்டதாம். அன்றுமுதல் அவருக்குக் கத்தி விளையாட்டுக் கற்பித்தது போது மென்றாகிவிட்டது நண்பருக்கு. "கை வணங்க வேண்டுமென்றால், அந்தக் கத்தி விளையாட்டு எனக்கு வேண்டாம்'' என்று பாரதியாரும் சொல்லிவிட்டாராம்.

இன்னும் பாரதியாரைப்பற்றி நண்பர்கள் சொல்லும் கதைகளை இன்றெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கலாம். அவருடைய கவிதை, வசனம், கட்டுரைகளைப்போலவே, அவரது குணம் மகா விசேஷமானது. பாரதியார் அன்பிலே தாய்போலவும், கொடுப்பதிலே கர்ணனாகவும், உணர்ச்சியிலே தொட்டாற் சுருங்கி மாதிரியும் இருந்திருக்கிறார். சத்திய வாழ்க்கையிலே ஆசைகொண்ட உத்தமர் அவர். மிடிமையும் துன்பமும், நாட்டின் அடிமை நிலையும், அவரை நிமிர வொட்டாமல் அடித்து, ஹிம்ஸித்துவிட்டன, ஆயினும், அவர் ஒரு மேதை, ஒரு மகான் என்பதற்கான சாட்சியங்கள், அவருடைய நூல்களில் மட்டிலுமல்லாமல் அவரது பிரத்யட்ச வாழ்க்கையிலுமே காணக்கிடக்கின்றன.

---

## 2 கவிகள் சிருஷ்டி

பாரதியார் ஒரு வர கவி. கவிதை அவரது உடன் பிறப்பு என்பதற்கும், அவருடன் பழகும் பேறுபெற்றோர் கூறும் கதைகளிலே சான்று காணலாம்.

உந்நதப் புலவர்கள் அனைவரும் பிறவிக் கவிஞர்களே யாவார்கள். அந்த ஜாதியிலே சேர்ந்தவர்தான் பாரதி

K. T. GANDHI MIDDLE SCHOOL RAYAVARAM TRICHY DT.

யாரும். ஒரு சின்ன மலர் தொட்டு, உலகைக் கலக்கும் பெரு நிகழ்ச்சிகள் வரையில், எதுவும் அவர் மனத்தைக் கிளறிவிடுகிறது. கவிதைக்கும் வாழ்வுக்கும் சம்பந்தமில்லை யென்று நினைப்பதும், ஜீவனற்ற சொற்காட்டிலே அலைந்து திரிவதே கவிஞர்களின் கடமையென்று எண்ணுவதும் தவறு. கவிஞர்கள் ஒருவகை வேதாந்திகள்: தீர்க்கதரிசிகள், சத்திய வழிகாட்டிகள். புனிதமாய் அழகாய், திறமையாய் வாழும் முறையைச் சித்திரம் செய்து தரும் சொல் ஓவியர்கள் அவர்கள். வாழ்விலே சின்னதும் பெரியதும் அவர்களுக்குக் கிடையாது. மலையைப்போலவே மல்லிகையும் அவர்களின் இதயத்தைப் பொங்கச் செய்யும். இந்த லோக சம்பந்தமற்ற வெறும் கற்பனை யுலக சஞ்சாரிகள் உன்னதக் கவிஞர்களாயிருக்க முடியாது. ஜீவ உணர்ச்சி வேகம் அவர்களுடைய கவிதைக்கு எப்படி ஏற்படும்? பாரதியார் ஜீவ உணர்ச்சி நிறைந்த கவிஞர்.

தேசபக்தர் திலகமான லாலா லஜபதி நாடு கடத்தப் பட்டால், பாரதியாரின் வாக்கிலே அருள் பொழியும் அதே வாணி, குழந்தை பாப்பா இடறி விழுந்தாலும் அமுதமாய் அவர் நாவிலே சொறிந்து விடுவாள். பாரதியாரின் சில கவிகள் பிறந்த கதையே மிகவும் ரஸமானது.

பாரதியின் குழந்தையான சகுந்தலாவுக்குப் பாப்பா என்பது செல்லப் பெயர். ஒரு நாள் அந்தப் பாப்பா மாடிப்படியினின்றும் தவறி விழுந்துவிட்டது. பாரதியார் ஓடிப்போய் அதை எடுக்கவில்லை. "ஓம் தத் ஸத்" என்று கூறிவிட்டு,

"ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

சின்னஞ் சிறு குருவிபோலே - நீ
திரிந்து பறந்து வா பாப்பா.
வன்னப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா"

என்று தொடங்கும் அற்புதமான நீண்ட பாட்டொன்றைக் காளமேகம்போல் வர்ஷித்து விட்டராம். குழந்தையும் தன் வேதனையை மறந்து மலர்ந்த முகத்துடன் தவழ்ந்து வரலாயிற்று.

செட்டிமார் நாட்டின் முக்கிய ஸ்தலமான காரைக்குடியில் ஹிந்து மதாபிமான சங்கம் என்ற சபை ஒன்று உண்டு. பாரதியார் அங்கே ஒரு முறை போயிருந்த போது, காரைக்குடி அன்பர்கள் சிலர், அந்த சங்கத்தைப் பற்றிப் பாட வேண்டும் என்று இவரைக் கேட்டுக் கொண்டார்கள்.

''பாண்டியா!'' என்று ஒரு காரைக்குடி அன்பரை இவர் அழைத்தார். அந்தப் பக்கத்தார் அனைவரையுமே 'பாண்டியா' என்றுதான் பாரதியார் அழைப்பாராம்.

"பாண்டியா! இப்போது ஒரு கோட்டுக் கொண்டு வந்து கொடுத்தால்தான் பாட்டு எழுதுவேன்" என்று நிபந்தனை போட்டார் பாரதியார்.

எங்கிருந்தோ ஒரு கோட்டை அவர்கள் சம்பாதித்துக் கொண்டுவந்து சமர்ப்பித்தார்கள். உடனே அந்தச் சங்கத்தைப் பற்றிச் சில விருத்தங்களைப் பாரதியார் மடமட-வென்று எழுதித் தந்தார். இந்த நிகழ்ச்சியில் நேரில் சம்பந்தப்பட்ட 'ஊழியன்' ஆசிரியர் ஸ்ரீ ராய. சொக்கலிங்கன், 'நாமெல்லாம் கட்டுரை எழுதும் விரைவைவிட வேகமாய், பாரதியார் அந்தப் பாட்டை எழுதிவிட்டார்' என்று இன்றும் கூறி வியக்கினுர் ஆனால், பாரதியாரின் முத்துப்போன்ற எழுத்துக்களிலே அடித்தல், திருத்தலே இருப்பதில்லை.

இம்மாதிரியே, பாரதியாரிடமிருந்து இன்னும் பல பாடல்கள் பிறந்த சந்தர்ப்பங்களைப் பற்றிப் பலவிதக் கதைகளை நண்பர்கள் கூறுகிறார்கள். அந்தக் கதைகள் அனைத்தும் அப்படி யப்படியே நிகழ்ந்திருக்குமோ, இல்லையோ; ஒன்று மாத்திரம் நிச்சயம். அதாவது, அவரைப் பாடத் தூண்டிய முக்கிய சம்பவம் மட்டில் உண்மையாகவேதான் இருக்கும். ஏனென்றால், அவர் ஜீவகளை சொரியும் கவிஞர். அவர் கனவை நனவாய்க் காட்டும் மாயா ஜாலக்காரர் அல்ல; நனவிலே கனவின் சௌந்தர்ய மெருகேற்றும் தேவதச்சன். 'புல்லினிலே வயிரப்படை' தோற்றுவிக்கும் காகுஸ்தன் பாரதியார்.

---

## 3. கவியும் வசனமும்

"பாட்டுத் திறத்தாலே – இவ்வையத்தை
பாலித் திடவேணும்"

என்று ஆசைப்படும் பாரதியார், அந்தச் சக்தியைப் பெற்றிருந்தார் என்றே சொல்லவேண்டும். அதற்கு உதாரணமாக, மாஜி ஹிந்து ஆசிரியர் காலஞ்சென்ற ஸ்ரீ ஏ. அரங்கசாமி ஐயங்கார் சொல்லும் ஒரு சம்பவத்தைக் கூறலாம்.

பாரதியாரின் சகோதரன் ஸ்ரீ ஸி. விசுவநாத ஐயர், பாரதியாரையும் அவர் நூல்களையும்பற்றி ஆங்கிலத்தில் எழுதியுள்ளதொரு நூலுக்கு ஸ்ரீ ஐயங்கார் அளித்துள்ள முன்னுரையில் பின்வருமாறு அந்த நிகழ்ச்சியை வர்ணிக்கிறார்:

ஒரு பெரிய மிதவாதத் தலைவரைப் பாரதியார், அடிக்கடி பத்திரிகைகளிலே, மிகவும் குரூரமாய்த் தாக்கிவந்தார். அதே மிதவாதத் தலைவர், பாரதி பாட்டை அவர் வீட்டிலே பாரதியே பாடிக் கேட்க வேண்டுமென்ற 'ஆசை வலைக்குள்' அந்த மிதவாதி

யின் சொந்த வர்ணனை இது - விழுந்துவிட்டார். பாரதியார் சமீபத்தில் பாடிய இன்னிசைக் கீதங்களைக் கேட்டபோது அந்த மிதவாதி அந்தக் கானத்தின் மந்திர சக்திக்குக் கட்டுப்பட்ட கைதியாகி விட்டார். அந்த நாள் இப்போது எனக்கு நினைவு வருகிறது. நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் நந்தனுக்கும் வேதியருக்கும் நடந்த சம்பாஷணை ரூபமாகவுள்ள அந்தக் கீர்த்தி வாய்ந்த மெட்டிலே, விஞ்ச் என்ற வெள்ளைக்காரருக்கும் ஸ்ரீ சிதம்பரம் பிள்ளைக்கும் பிரபலமானதொரு ஜாமீன் வழக்கில் நடந்த சம்பாஷணையைப் பாடலாய்ப் பாடியிருந்த கீதத்தைப் பாரதியார் பாடியபோது, அந்த மிதவாதியின் மன மாற்றம் சம்பூர்ணமாகி, அந்த நிமிஷத்திலேயே பூர்ண தேசியவாதியாகிவிட்டார்!

'கவிகளின் அழகை யறிய, கவிகளையே படிக்க வேண்டும்; கவிகளைப்பற்றி யல்ல' என்று கூறுவார்கள். கலைகள் அனைத்துக்குமே - மிக முக்கியமாக இலக்கியத்துக்கு - இந்தச் சூத்திரம் பொருந்தும். பாரதியாரைப் பற்றி எவர் எத்தனை யெழுதினாலும், யார் என்ன வர்ணித்தாலும் நாம் ஒன்றும் புரிந்துகொள்ள முடியாது. 'பாரதியை அறியப் பாரதியைப் படியுங்கள்' என்றுதான் ஒருவர் நமக்கு யோசனை கூறமுடியும்.

பாரதியைப்பற்றி யாராரோ என்ன என்னவோ சொன்னார்கள்; என்ன என்னவோ எழுதினார்கள். அவர் மகா கவியா, இல்லையா என்ற 'மகத்தான' விவாதத்தையும் சிலர் நடத்தினார்கள். அதைப்பற்றி யெல்லாம் தீர்ப்புக்கூற நான் தகுதியற்றவன். ஆனால், பாரதியார் விஷயத்தில், என் சொந்தத் தவறொன்றைப் பகிரங்கமாய்த் தெரிவிப்பதன்மூலம் பிராயசித்தம் செய்து கொண்டு, உங்களுக்கும் ஓர் எச்சரிக்கை செய்யவே, இங்கே அதைப்பற்றிப் பிரஸ்தாபித்தேன்.

பாரதியாரின் நூல்களை நன்றாய்ப் படிக்காமலே பிறருடைய அபிப்பிராயங்களை யெல்லாம் கேட்டுக்கேட்டு அவற்றால் பல குருட்டு அபிப்பிராயங்களுக்கு ஆளாகி அவற்றை நானும் பிறரிடம் பரப்பி வந்ததுண்டு. 'பாரதியாரின் கவிகள் நன்றாய்த்தான் இருக்கின்றன; ஆனால், வசனம் சுகமில்லை'' என்பார் ஒருவர். ''ஞான ரதமும்'' குயிலுந்தான் அற்புதம். மற்றவை சத்தில்லாதவை'' என்பார் இன்னொருவர். கண்ணன் பாட்டு என்று ஓர் அனுபந்தத்தைச் சேர்ப்பார் மற்றொருவர். ''தேசிய கீதம் எதுவும் நெடுநாள் நில்லாது. மற்றவற்றில் ஏதோ ஒன்றிரண்டு மிகுந்து நிற்கும்'' என்று தாட்சண்யம் காட்டுவார் வேறொருவர். 'பாரதி தேசிய கவி,'' அவர் பெருமையெல்லாம் சுதேச கீதங்கள்தான்'' என்று மறுத்துரைப்பார் மறுபடியும் ஒரு புத்திமான். இந்த அபிப்பிராயக் கந்திரகூளத்திலே சிக்கிச் சுழன்றுகொண்டிருந்த எனக்கு இப்போதுதான் விடுதலை கிடைத்தது. சென்ற சில காலமாக, பாரதியாரின் நூல்களை, திறந்தமனத்துடன் படிக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. பாரதியாரின் வசன நடையாகட்டும், கவிதை யாகட்டும், எந்தக் கவிதையை, கட்டுரையை, கதையை எடுத்தாலும் சரி, தெளிவுற்ற தேனின் மதுரமொன்றை நான் அனுபவிக்கிறேன், அவற்றிலே ஒரு தனித்த மோஹன சக்தி இருக்கிறது.

ஆங்கிலக் கவிகளின் சாயை அவர் கவிகளிலே காணப்படுகிறது. ஆனால், நாட்டின் பழைய ஐதீகங்களின் அஸ்திவாரமும் சிறப்பியல்பும் மேதையும் அவற்றில் ஊடுருவி உறைகின்றன. ஷெல்லி, கீட்ஸ் என்ற இரண்டு ஆங்கிலக் கவிஞர்களிடமுந்தான் பாரதிக்கு அதிகப் பிரியமாம். 'ஷெல்லீயன் கில்டு' என்ற ஒரு சங்கம்கூடச் சிறு வயதிலே, தமது கிராமத்தில் நிறுவி,

நண்பர்களுக்கு ஷெல்லியின் பாடல்களை அவர் வியாக்கியானம் செய்து வந்தாராம். ஆயினும், பாரதியாருக்கும், ஷெல்லி, கீட்ஸ் ஆகிய இரண்டு கவிஞர்களுக்கும் இருக்கும் ஒற்றுமைகளைவிட வேற்றுமை அதிகம். ஒரு வகையில், வேர்ட்ஸ்வொர்த் என்ற ஆங்கிலக் கவி திலகத்துடன் அதிக ஒற்றுமை அவருக்கிருப்பதாய்க் கூறலாம். ஷெல்லி, கீட்ஸின் நடை மெருகும், உணர்ச்சி வேகமும், வேர்ட்ஸ் வொர்த்தின் அமைதியும் கம்பீரமும் குதூகல நிறைவும் பாரதியின் பாடல்களிலே செறிந்திருக்கின்றன.

கருத்தொருமை, ஓசை இனிமை, சொல் நயம், அமைப்பு அழகு ஆகிய இலக்கிய லட்சணங்கள் யாவும் அமைந்திருப்பவை பாரதியாரின் நூல்கள்.

அவரது வசன நடையும் சரி, கவிதை நடையும் சரி, மிக மிக எளிய சரளமான நடை, கடினமான தமிழ்ச் சொல் அல்லது வாக்கியம் ஒன்றைக்கூட, அவருடைய எழுத்துக்களிலே காணமுடியாது. எளிய நடை என்பதால், சிலரைப்போல், உயிரற்ற, வர்ணமில்லாத, கர்ண கடூர நடையைப் பாரதியார் எழுதவில்லை. பாரதியாரின் நடை மகா எளியது; ஆனல், தெவிட்டாத தேன் இனிமை பயப்பது.

பாரதியாரின் எழுத்துக்களிலே ஜீவ வேகம் பொங்கி நிற்கிறது; வாழ்வை உயர்விக்கும் ஒரு வேதாந்தமும், தேசீய வெள்ளக் கொந்தளிப்பின் எதிரொலியும், ஒளியையும் நிழலையும் சேர்த்துப் பின்னிய மனேலய சித்திரங்களும் ஒன்ருேடொன்று இழைந்து நிற்கின்றன. வருங்காலத் தமிழிலக்கிய வானிலே, துருவ நட்சத்திரம்போல் விளங்கப் போகிறவர் நம் பாரதியே.

———

## 4. நீங்களே படியுங்கள்

'பாரதியை அறியப் பாரதியை நீங்களே படியுங்கள்' என்று கேட்டுக்கொண்டேனல்லவா? பாரதி எழுத்துக் களின் இனிமைக்குச் சில மாதிரிகளை உங்களுக்கு உதாரணம் தருகிறேன்.

கண்ணபிரானை, கவி மரபை யனுசரித்து நாயக-நாயகி பாவத்தோடு துதித்து எழுதிய கண்ணன் பாட்டு களில் கண்ணம்மா என் காதலி என்ற ஒரு பாட்டில், பாரதியார் வர்ணிக்கும் இந்தச் சௌந்தர்யலஹரி சூழலும் வரிகளைப் பாருங்கள்.

சுட்டும் சுடர்விழிதான் - கண்ணம்மா
சூரிய சந்திரரோ?
வட்டக் கரியவிழி - கண்ணம்மா
வானக் கருமை கொல்லோ?
பட்டுக் கருநீலப் - புடவை
பதித்த நல்வயிரம்
நட்ட நடுநிசியில் - தெரியும்
நக்ஷத்தி ரங்களடீ!
சோலை மலரொளியோ - உனது
சுந்தரப் புன்னகைதான்?
நீலக்கடலலையே - உனது
நெஞ்சி லலைகளடீ!
கோலக் குயிலோசை - உனது
குர லினிமையடீ!
வாலைக் குமரியடீ - கண்ணம்மா
மருவக் காதல்கொண்டேன்!

இதில் ஒவ்வோர் அணியும் நம் மனத்தைக் கொள்ளை கொள்ளுவது மாத்திரமன்று; யாவும் ஒருங்கே சேர்ந்து,

ஒரு தெய்விகத் திருவுருவை, சௌந்தர்யத்தின் சம்பூர்ணப் பிரதிமையான ஒரு ஜீவ சித்திரத்தை, நம் மனக்கண் முன்பு கொணர்ந்து நிறுத்திவிடுகிறது.

ஞானரதத்திலே இயற்கைக் காட்சியொன்றைப் பற்றி வர்ணிக்கும் வசனமும் இதே அழகும் இனிமையும் வாய்ந்ததாகும்:

"எதிரே கடல். சந்திரக் கிரணங்களால் ஜோதியுயிர் கொடுக்கப்பெற்ற அலைகள். வெள்ளை மலர்கள் புனைந்து, புஷ்பக் குன்றுகள் கிடப்பதுபோலத் தோன்றிய கப்பல்கள். தூரத்திலே, அன்னங்கள் மிதப்பதுபோல மிதந்த இனிய படகுகள். மேலே சந்திரன், வெள்ளி மேகங்கள்; இம் மேகங்களிலே சில வலைகள் பரப்பியிருப்பதுபோலத் தோன்றும்; சில அலைகளடிப்பதுபோலிருக்கும்; ஒன்று பூச் சிதறியது போலத் தோன்றும்; கீழே மிதக்கும் படகுகளுக்கு வானக் கண்ணாடியிலே தோன்றும் சாயைகள்போலச் சில மிதந்து செல்லும். இனி நக்ஷத்திரங்கள்! வானக் கடலிலே வெடித்தெழுந்த வயிரங்கள்! சிதறுண்ட இன்பங்கள்! வானப் பொய்கையிலே மனமெனும் சிறிய வண்டு போய் ஒளித்தேன் குடிப்பதற்கமைந்த எண்ணில்லாத மலர்கள்! திசையென்ற அனந்த வஸ்துவுடன், ஈசனறிவு என்ற அனந்த வஸ்து தாக்கியபோது பொறித்தெழுந்த சுடர்ப்பொறிகள்!"

'ஞானரதம்' முழுவதுமே இம்மாதிரி' சொல்லினைத் தேனிற் குழைத்து' இழைத்த சிங்கார மண்டபமாகும்.

ஹிந்து மதத்தின் உந்நதத் தத்துவமான யோக சாதன இன்பத்தையும் பாரதியைவிட எளிதாயும் பரவச லாகிரியுடனும் வேறொருவன் வர்ணிக்க முடியாது. 'நந்தலாலா' வின் கருமையைக் 'காக்கைச் சிறகி'னிலும் கீதக் குரலைக் கேட்கு மொலிகளில் எல்லாமும் உணரும் பாரதியார்,

அந்தச் சுகிர்த அனுபவங்களோடு அமைந்து நின்றுவிட வில்லை; இறைவனின் வெம்மைத் திருமேனியான அக்னி ஸ்பர்சத்தால் புனிதமடைந்த ஆனந்த வெறி கண்டு;

"தீக்குள் விரலை வைத்தால் -நந்தலாலா-நின்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா-நந்தலாலா !"

என்று கோஷிக்கிறார்.

ஆண்டவனாகிய காதலனை ஜீவாத்மாவாகிய காதலி பிரிந்திருக்கக் கூடும்; ஆனால், க்ஷணமேனும் மறந்திருக்க முடியுமோ? இதை,

"தேனை மறந்திருக்கும் வண்டும் - ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்
வானை மறந்துவிட்ட பயிரும் - இந்த
வைய முழுதுமில்லை, தோழி"

என்று கண்ணனின் காதலி வாய்ப் பிறப்பாய்ப் பாரதியார் ஒலிக்கும் வரிகளைத்தான் நாம் ஒரு முறை கேட்டோமானால் நாம் காதுகளில் என்றென்றும் ரீங்காரம் செய்து கொண்டிருக்கத் தவறுமோ?

பாரதியாரின் தேசியப் பாடல்களும் எவ்விதத்தும் அழகில் குறைந்தவை யல்ல. "வேண்டுமடி யெப்போதும் விடுதலையம்மா' என்பது ஓர் அற்புத மனோராஜ்ய உலகமாகும். 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவியிருந்தது மிந்நாடே' என்ற பாட்டின் மனோதர்மத்தையும் உணர்ச்சிச்செறிவையும் எவ்வளவு புகழினும் போதாது.

'சர்வே ஜனா; சுகினோ பவந்து' என்ற சுருதி முழக்கத்தை நிலைநாட்ட அடங்கா ஆர்வங்கொண்ட கவி பாரதி,

"மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ !"

என்று தொடங்கி,

"தனி யொருவனுக் குண வில்லையெனில்
ஜகத்தினை யழித் திடுவோம்!"

என்று உலகினுக்கே எச்சரிக்கை புரியும் கம்பீர சூத்திரமும் இணையற்ற புதுமையாகும்.

ஆண்டாளைப் போல, சர்வ செல்வ போகங்களோடும் இப்புவியிலேயே அமர வாழ்வு வாழும் ஆர்வம் படைத்தவர் பாரதியார். தாமல்ல, முழு உலகமும் அப்படி வாழவேண்டும் அவருக்கு. பாரதியின் திருமகள் ஸ்தோத்திரம் அவரது இந்தப் புனித லட்சியத்தை வெகு அழகாய் வெளியிடுகிறது:

"செல்வ மெட்டு மெய்தி - நின்றன்
செம்மை யேறி வாழ்வேன்
இல்லை யென்ற கொடுமை - உலகில்
இல்லையாக வைப்பேன்.
முல்லை போன்ற முறுவல் - காட்டி
மோக வாதை நீக்கி
எல்லையற்ற சுவையே - எனை நீ
என்றும் வாழ வைப்பாய்!"

---

## 5, அழகுத் தெய்வம்

பாரதியார் 'அழகுத் தெய்வத்'துக்கு ஒரு பாமாலை சூட்டியுள்ளார். மனத்தின் மோகந் தீர்க்கும் அந்தப் பாமாலையின் முடிவு ஓர் அற்புத உண்மையைச் சுட்டுகிறது. 'மங்கியதோர் நிலவினிலே' அவர் கனவிற் கண்ட அந்த அழகுத் தெய்வம்.

'வயதுபதி னாறிருக்கும்
இளவயது மங்கை;

பொங்கிவரும் பெருநிலவு
போல் ஒளிர் முகமும்
புன்னகையின் புதுநிலவும்
போற்றவரும் தோற்றம்;
துங்கமணி மின்போலும்
வடித்தாள்...............

கவி அவளைப் பல கேள்விகள் கேட்கிறார். அநாதி காலந் தொட்டு மனிதனின் மனத்தை மோகித்து மயக்கிவரும் பிரக்ருதியின் மாயா விலாச மர்மங்களைப்பற்றிய கேள்விகள் அவை. தெய்வத்தின் பதில்களும் மர்மங்களாகவே இருக்கின்றன. இதயத்தினின்றும் எழுந்த கேள்விகளுக்கு, இதயத்தின் விடாயைத் தீர்க்க முயலும் மர்மமான பதில்களாகவே அவையும் இருக்கின்றன. "ஞாலத்தில் விரும்புவது நண்ணுமோ?" என்றால், "நாலிலே ஒன்றிரண்டு பலித்திடலாம்" என்று அழகுத் தெய்வம். 'ஏலத்தில்' விட்டு விடுகின்றாள். ஆனால், இறுதியிலே அன்னை முகத்திலருள் கூட்டினாள்'; கவியும் 'மோகமது தீர்ந்'தார்.

அழகுத் தெய்வம் மோகனசக்தி கொண்டது; மோகத்தைத் தீர்ப்பது. அழகுத் தெய்வத்தின் பிரதிபிம்பம். எங்கும் எல்லாப் பொருளிலும் நிலவியிருக்கிறது. அழகுத் தெய்வம் அருள் சுரக்குமாயின், மனித வாழ்வு இன்பக் களஞ்சியமாகி விடுகிறது. கவிகளும் கலைஞரும் வேதாந்திகளும் தாங்கள் கண்ட அழகுத் தெய்வ தரிசனத்தையே உபதேசிக்கிறார்கள்.

ஸ்தூலப் பொருள்களிலும், சூட்சும சக்திகளிலும், சொல்லிலும் செயலிலும்! எங்கும் எல்லாவற்றிலும் அழகுத் தெய்வம் நர்த்தனமிடுகிறது. இயற்கையின் சிருஷ்டியிலே அழகுத் தெய்வம் தன் தெய்வ ஒளியை வீசுகிறது. இந்த அண்டமெல்லாம் அழகுத் தெய்வத்

தின் நாட்டியசாலை. கதிரிளஞ் ஜோதியிலும், தண்மதி நிலவிலும், பூங்காவனத்திலும், இன்மலர்ப் பொய்கையிலும் அழகுத்தெய்வம் களிநடம் பயில்கிறது. தரிசனத்துக்குப் பண்படுத்தப்பட்ட மனம் அங்கே அதன் காட்சி பெற்று, தூய்மையும் மகிழ்ச்சியும் உறைவிடமாய்ப் பரிணமித்துவிடுகிறது. ஓவியனின் சித்திரமும், சிற்பியின் பதுமையும், அழகுத் தெய்வத்தின் அருள்பெற்ற பாத்திரங்கள். அவர்கள் வணங்குவது அதையேதான்.

இன்னிசைகளிலும், அற்புதக் கற்பனையிலும், வீரச் செயல்களிலும், அழகுத் தெய்வத்தைக் காண வியல்கிறது. மனிதனது நித்திய வாழ்வே அழகுத் தெய்வத்துடன் ஒளிந்து பிடிக்கும் விளையாட்டாக இருக்கிறது. அழகுத் தெய்வம் எங்கும் தோன்றுகிறது; எங்கும் மறைந்துவிடுகிறது. மனிதனது வேலை, எந்நேரமும், தோன்றித்தோன்றி மறைந்தொளிக்கும் அதனைத் தேடிக் கொண்டே யிருத்தலாகும். மனிதன் பெற விரும்பும் நித்யானந்தம், அழகுத் தெய்வ தரிசன அனவரத அனுபவமே யாகும். மனிதனின் ஆசையெல்லாம், ஆதர்சமெல்லாம், விடாயெல்லாம் அறிந்தோ அறியாமலோ-அழகுத் தெய்வத்தை என்றும் எங்கும் எதிலும் தரிசித்துக் கொண்டே யிருப்பதை நாட்டமாகக் கொண்டனவே யாகும்.

இந்த உண்மையைத்தான் கவி ஷெல்லி பின்வருமாறு கூறுகிறார்:

பர்வதங்களின்மீது கவிய வோட்டிய பனிச்சூழல் எத்தகையது? இரவிலே வீசும் இளங்காற்று, அமைதியானதோர் இசைக் கருவியிலே மீட்டும் கானம் எத்தகையது? நள்ளிரவிலே பாய்ந்தோடும் நதி வெள்ளத்தின் மீது வீசும் தண்ணிலவு எத்தகைத்து? இந்தப் பனிச் சூழலையும், கானத்தையும், தண்ணிலவையும்

RAYAVARAM

ஒத்து, அமைதியற்ற வாழ்வுக் கனவுக்குச் சாந்தியும் உண்மையும் நல்குவது உனதொளி ஒன்றினாலேயே யாகும்.

ஷெல்லி, 'ஞான சௌந்தரியத்' தெய்வத்தை நோக்கி இவ்வாறு போற்றிப் புகழ்கிறார். அறிவிலும் அந்தச் சௌந்தரிய தெய்வத்தைக் கண்டாலன்றி, மனிதனது மாயாமோகம் தீர்ந்து இன்பம் பெறும் மார்க்கமில்லை.

அழகுத் தெய்வத்தைக் கவிகள் சௌந்தரியமாகக் காண்கிறார்கள்; வேதாந்திகள் ஞானமாகப் பார்க்கிறார்கள்; குண சீலர்கள் சத்தியமாய்த் தரிசிக்கிறார்கள்; கருணா மூர்த்திகள் அஹிம்சையாய்க் காண்கிறார்கள்; வீரர்கள் வீரமாகத் தரிசிக்கிறார்கள். அமைதியிலும், பயங்கரத்திலும் அழகுத் தெய்வம் தோன்றுவதுண்டு, இன்னிசை பொங்கிவழியும் கானத்திலும், உள்ளம் திடுக்கிடக் குமுறி ஓசை புரியும் இடியிலும் ஒருங்கே அழகுத் தெய்வம் தோன்றுகிறது. மனிதரின் காதல் நாடகத்திலும் அதனைக் காணலாம்; குண்டு மழை பொழியும் போர்க்களத்தின் வீராவேசத்திலும் அதனைப் பார்க்கலாம், கலைஞனும் வீரனும் ஞானியும், அதனை எங்கும் தரிசிக்கிறார்கள்.

மனித இயல்பு, அழகினை அனுபவித்தலே யாகும், அழகுச் சுவையுள்ளவன், அழகுத் தெய்வத்தை எங்கும் தரிசிக்கும் மனப்பண்பைப் பெற்றவன், களிப்பு வெள்ளத்திலே திளைக்கிறான். எங்கும் கரந்துறையும் அழகுத் தெய்வத்துடன் யோகம் பயிலும் மனிதன், தன்னைச் சுற்றிலும் அழகொளியைப் பரப்புகிறான். அவன் சொல்லும், செயலும், கருத்தும், அழகு பொதிந்தவை யாகின்றன, வெற்றி நிறைந்த கவிஞனையோ, வீரம் செறிந்த தீரனையோ, ஒழுக்கம் மிகுந்த முனிவனையோ, ஞானம் ஒளிர்ந்த வேதாந்தியையோ எடுத்துக்கொள்ளுங்கள். அவர்கள் சொல்லெல்லாம் அழகு பொதிந்த இன்பநாத மாகவே

இருக்கக் காண்போம். அவர்கள் சரித்திரம் நமது உள்ளத்தை உருக்கிப் புனிதம் செய்யும் இன்பக் காவியமாயிருக்கும். அவர்கள் செய்யும் செயல்கள், நமது அழகுச் சுவைக்கு உணவூட்டும் ஆனந்தாமிர்தமா யிருக்கும். அழகுத் தெய்வத்தின் சக்தியும் இயல்பும் இத்தகையன; அதனைத் தரிசிக்கும் பேறு பெற்றோரின் தன்மையும் பெருமையும் இவ்வகையின.

எல்லா மனிதரும் தமது வாழ்வில் தேடுவதெல்லாம் இவ்வழகுத் தெய்வ ஜோதியையேதான் என்றாலும், அநேகர் அதனை உணர்வதில்லை; அதன் தரிசனம் கிடைக்கும்போது, அதனை அனுபவியாது கைந்நெகிழவும் விட்டு விடுகிறார்கள்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

என்று தெய்வப்புலவர் கூறுகிறார்.

'மரியாதை யென்பது மனிதர் பரஸ்பரம் அழகுபெற நடந்துகொள்ளும் முறையே' என்றார் கவி திலகர் டாகூர். எனினும், மரியாதையின் அழகினைக் காணத் தவறும் மனிதர் பலருளர். உண்மை, அருள், ஞானம், உயர் கற்பனை ஆகிய பண்புகளிலே இதயத்தைக் கவரும் மோஹன சௌந்தரியம் உண்டு. அவை எந்த மனிதனிடம் தோன்றுகின்றனவோ அவனையும், எவனை யடைகின்றனவோ அவனையும் தோன்றிய சம்பவத்தையும் அழகும் தூய்மையும் பெறச்செய்கின்றன. அழகுத் தெய்வத்தைத் தரிசனம் செய்ய, வாழ்விலே பற்பல சந்தர்ப்பங்கள் உண்டு. அவற்றையெல்லாம் பயன்படுத்திக் கொள்ளுவதே வாழ்வை இனிக்கச் செய்யும் மார்க்கமாகும்.

# 6. தேசிய கீதங்கள்

பாரதியாரின் கவிதையைப் பற்றிப் பேசும்போது, ஒரேயடியாய்ப் புகழ்ந்துவிடலாமா? அது குருட்டுத்தனம் ஆகிவிடாதா? எதைப்பற்றிப் பேசினாலும் ஒரு 'ஷரா' போட்டுப் பேசினால்தானே நமது புத்திசாலித்தனம் தூக்கிக் காட்டும். இதற்காகப் பாரதியாரின் விஷயத்திலும் இந்தமாதிரி ஒரு 'ஷரா' போட்டுப் பேசுவது, சில இலக்கிய ரசிக - நிபுணர்'களின் 'பாஷ'னாக இருந்துவருகிறது. "பாரதியாரின் எல்லாப் பாட்டுகளும் உயர்ந்த தரம் என்று சொல்ல முடியாது. உதாரணமாக, தேசியப் பாடல்களில் அநேகம் நிற்கமாட்டா. பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன் பாட்டு, பொதுவகையான சிற்சில பாடல்கள் இவைதாம் நிற்கும்" என்று சிலர் தாட்சண்யக் குரலில் சொல்கிறார்கள். தேசியம் பாரதியின் பலவீனம் என்பதுபோல இருக்கிறது அவர்களின் கூற்று. உண்மையில் தேசியம்தான் பாரதியின் பலம் என்று நாம் தைரியமாய்ச் சொல்லலாம். பாஞ்சாலி சபதத்தையே எடுத்துக்கொள்ளுங்கள். வேத ரிஷி வியாசரைப் போல், பாரதியார் அதைப் பாடவில்லை. நவ இந்தியாவின் விடுதலை வீரனாகவே அதை அவர் பாடியிருக்கிறார் என்பதற்குப் பல சான்றுகள் காணலாம். பாரதியாருடைய உணர்ச்சிகளின் ஜீவ சுரம் தேசியம்தான். அடிமை நிலையில் பாடிய பாட்டுகள் சுதந்தர மடைந்த பின் நிற்கமாட்டா என்றும் சிலர் வாதிக்கிறார்கள். இதற்கெல்லாம் அர்த்தம் கிடையாது. குயிலாய்ப் பாடியது மனிதனுக்குப் புரியுமா, பிடிக்குமா என்று கேட்டால் எப்படியோ அப்படித்தான் இதுவும். ஒரு பாட்டை நாம் அநுபவிக்க, அந்தப் பாட்டின் சூழ்நிலையில் நாம் இருக்க வேண்டும் என்பதில்லை. நம் அநுதாபமும் கற்பனையும் பண்பட்டுச் சரியான நிலைமையில் இருக்குமானால்,

உண்மையான கவிதை, கலை எதையும் நாம் அனுபவித்து விடமுடியும். பொதுவாக ஒரு பாட்டு நிற்பதும், நில்லாமல் போவதும், அது பாடப்பட்ட சூழ்நிலையைப் பொறுத்த தல்ல; அந்தப் பாட்டின் சுய உணர்ச்சி, இசை, மனோதர்மம், சொல் சித்திரம் ஆகியவைகளின் பலத்தையே பொறுத்ததாகும். பாரதியாரின் தேசியப் பாடல்களில் இந்தப் பலம் இருக்கிறதா என்றுதான் நாம் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, அவைகளிலே இது அபரிமிதமாயிருக்கிறது என்றே புலனாகிறது.

பாரதியாருக்குத் தாய் நாடு 'உண்மையிலே தவறாத புலவர் - உணர்வினிலே உயர் நா'டாகவே காட்சி தருகிறது. அரசியல் பொருளாதார விமோசனங்களை வறட்டுத்தனமாக அவர் பாடவில்லை. அவருடைய தாய் நாடு, நவ யௌவனம் பெற்ற ஒரு கனவுலகமாகும். அதிலே பழமையும் புதுமையும், சென்றதும் வருவதும், உருகிக்கூடிப் பொன்னொளி வீசுமோர் அற்புத உருவம் பெறுகின்றன. அவருடைய தேசிய கீதங்களிலே நாம் காணும் தாய் நாடு உலக மக்கள் அனைவருமே லட்சியமாய்க் கொள்ளத்தக்க ஒரு கற்பனை யுலகமாகவும் விளங்குகிறது.

'எந்தையும் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே'

என்று தொடங்கும் நாட்டு வணக்கப் பாடலை, உலகின் எந்த நாட்டவர் பாடக் கூடாது? "தலைமுறை தலைமுறையாய் நம் முன்னோர் வாழ்ந்த நாடல்லவா இது" என்ற கருத்தை கற்பனை யுள்ளத்தோடு விஸ்தரிக்கிறார் கவிஞர். அந்தக் கற்பனையிலே, அவர் காணும் அற்புதக் காட்சிகள் நம் உள்ளம் சொக்கும்படியில்லையா? பாரதியார் பாடுகிறார்.

"...............—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்தது மிந்நாடே-அவர்

கன்னியராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே-தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடி இல்
போந்ததும் இந் நாடே!
மங்கையராயவர் இல்லற நன்கு
வளர்த்தது மிந்நாடே-அவர்
தங்கமதலைக ளீன்றமு தூட்டி
தழுவிய திந்நாடே-மக்கள்
துங்கமுயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே-பின்னர்
அங்கவர்மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே-இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?"

எளிய சொற்கள்தான்; எளிய காட்சிகள்தான். ஆனால், என்ன மனோகரமான சித்திரம்! என்ன மதுரமான வாக்கு! நாம் இந்த வரிகளைப் பாடி, பாடக்கேட்டு அனுபவிக்க வேண்டும். பாரதியாரின் பாடல்கள் அனைத்தையுமே பாடியும் பாடக்கேட்டும் தான் அனுபவிக்க வேண்டும். ஏனென்றால், பாடுவதற்காகவேதான் பெரும்பாலும் அவர் பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பல்லாயிரம் மைமில்களுக்கப்பாலுள்ள பிஜித் தீவின் 'கரும்புத் தோட்டத்திலே' இந்தியப் பெண்கள் படுந் துயரை, கவிஞர் பாடும்போது, நம் உள்ளம் சிலிர்க்கிறது.

"நாட்டை நினைப்பாரோ-எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றேயன்னை
வீட்டை நினைப்பாரோ-அவர்
விம்மி விம்மி விம்மி விம்மி யழுங்குரல்

கேட்டிருப்பாய் காற்றே-துன்பக்
கேணியிலே எங்கள் பெண்களழுத சொல்
மீட்டு முரையாயோ-அவர்
விம்மியழவும் திறங்கெட்டுப் போயினர்
கரும்பு தோட்டத்திலே!"

இதுவும் முற்றிலும் பாரதியின் தேசிய உணர்ச்சியிலே பிறந்த பாட்டுத்தான். உணர்ச்சிப் பெருக்கைப் பொழிவதில் இணையற்ற கவிதைகளில் ஒன்று அல்லவா இது?

பாரதியார் தேசிய வெறி பிடித்திருந்தார். விடுதலை வேண்டினார். எப்படிப்பட்ட விடுதலை?

"தூண்டுமின்ப வாடை வீசு துய்ய தேன் கடல்
சூழ நின்ற தீவிலங்கு சோதிவானவர்
ஈண்டு நமது தோழராகி எம்மொடமுத
முண்டு குலவ நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய
நினைத்திடும் இன்பம் அனைத்தும் உதவ
பண்ணில் இனிய பாடலோடு பாயு மொளியெலாம்
பாரில் எம்மையுரிமை கொண்டு பற்றிநிற்கவே
நண்ணியமரர் வெற்றி கூற
நமது பெண்கள் அமரர் கொள்ள
வண்ணமினிய தேவ மகளிர்
மருவ நாமும் உவகை கொள்ள
வேண்டுபடி யெப்போதும் விடுதலை, அம்மா!"

பாரதியின் விடுதலை உணர்ச்சி. கட்டுக்கடங்காததாகும். ஆனால், அவருடைய தேசிய வெறி, ஒரு நிமித்த மாத்திரமேயாகும். அதிலிருந்து, வான முட்டும் ஒரு லட்சியம் பிறக்கிறது. பாரதியின் தேசியப்பாடல்கள் அனைத்திலும் அந்த உன்னத லட்சியத்தின் சாயை படர்ந்தே யிருக்கிறது. அவருடைய மற்றப் பாடல்களுக்கு அவருடைய தேசியப் பாடல்கள் எந்த விதத்திலும் மாற்றுக் குறைந்

தவை அல்ல. அவ்வாறு சொல்வதோ, பேசுவதோ சுத்த அபத்தமாகும்.

---

## 7. கவி லட்சணம்

யார் கவிஞன்? அவனது லட்சணம் என்ன? பாரதியார் அந்த லட்சணத்தை எவ்வளவு பூர்த்தி செய்கிறார்? பாரதியாரைப் பற்றி இவ்வளவு தூரம் பேசிய பின், இந்தக் கேள்வியை இங்கே எழுப்பிய காரணம் என்னவென்றால், அதை இந்த நிலையில் சர்ச்சை செய்வது எளிதாகும் என்பது தான். 'இலக்கியம் கண்டதற்'குத் தான், 'இலக்கணம் இயம்ப' முடியும். தவிர, பாரதியார் ஒரு மகாகவி என்று இனி யாரும் ஸ்தாபிதம் செய்யத் தேவையில்லை. அவரைத் தமிழ் உலகம் ஒப்புக்கொண்டுவிட்டது. ஆகையால், "ஓ! எங்கள் பாரதியார் பிரமாதமான கவி" என்று எவரும் பாத்தியம் கொண்டாடிக் கச்சை கட்டிக் கொண்டு முன்வந்து அதை நிலைநாட்ட அவசியமில்லை.

ஆனால், பாரதியாரிடம் நாம் காணும் கவிஞனின் லட்சணத்தைத் தெளிவுபடுத்திக் கொள்வதன் மூலம், பொதுவாக எது கவிதை என்பதை மதிப்பிட்டுக்கொள்ள நாம் ஒரு வழிகாட்டியைப் பெற முடியும்.

பழம் பண்டிதர்களும் சரி, புதிய புரொபஸர்களும் சரி, சில 'சிரஞ்சீவி' ஆசிரியர்களும் சரி - கவிதை, கலை, இலக்கியங்களைப் பற்றி என்னென்னவோ லட்சணங்கள் சொல்லுவார்கள். அவர்கள் மெத்தப் படித்தவர்கள். உண்மையைச் சொல்லுகிறேன். நான் அப்படிப் படித்தவன் அல்ல. என் சொற்பப் படிப்பையும், அறிவு அனுபவங்களையும் கொண்டு. எந்தக் கலையைப் பாராட்டுவதற்குமே சில அடிப்படை லட்சணங்கள் வகுத்து வைத்துக் கொண்டிருக்கிறேன். அவற்றை உரை கற்களாகக் கொண்டு பார்க்கும்போது, பாரதியாரை ஓர் அபூர்வ மேதையாக நான் காண்கிறேன்.

ஒரு கவிஞன் எப்படிப்பட்டவன் என்பதை, ஆங்கிலப் பெருங்கவிஞரான ஷெல்லி மிக அழகாகவும் வெகு சுருக்கமாகவும் உன்னதமான ஒரு கவித் துணுக்கிலே வர்ணித்துத் தந்திருக்கிறார் கவிதை, கலைகளைப் பற்றிப் பேசும் போதெல்லாம், அதுதான் எனக்கு ஞாபகம் வருகிறது. அதை நான் ஆயிரம் தடவை திரும்பத் திரும்பச் சொல்லவும் தயங்கமாட்டேன். "கவிதை எழுதுவதுதான் கவிஞனின் வேலை. அதை ஆராய்ந்து தீர்ப்புக் கூறுவது எங்கள் ராஜ்யம்" என்று பண்டிதர் தர்க்கம் செய்யக்கூடும். பழம் பண்டிதர் அல்ல, மேல்நாட்டு இலக்கியங்களைக் 'கரை கண்டுவிட்ட' புதிய பண்டிதர்தான் இப்படிப் பெரும்பாலும் துடிக்கிறார். இலக்கியத்துக்கு இவருடைய பூசாரித்துவம் அவசியம்தானோ, அல்லவோ - நான் அறியேன். எனக்கு அது பிடிக்கவில்லை. "வீடு கட்ட எனக்குத் தெரியாது. கட்டின வீட்டைப் பிய்க்கத் தெரியும்" என்று சொல்லி, குருவியின் கூட்டைக் குதறி எறிந்த பஞ்சதந்திரக் குரங்கின் மனோபாவம்தான் இலக்கிய விமர்சனத்துக்கு மூலதனம் என்றால், அதை ஒப்ப என் மனம் இசையாது. ஆகையால், ஒரு கவிஞரே கவிஞனைப் பற்றி என்ன லட்சணம் சொல்லுகிறார் என்பதை நான் பெரிதாய் மதிக்கிறேன்.

கவிஞர் ஷெல்லி 'வானம்' பாடியைப் பற்றி அற்புதமான ஒரு கவிதை பாடியிருக்கிறார். அது ஆங்கில இலக்கியத்திலே ஒரு மகோன்னத ஸ்தானம் பெற்றிருக்கிறது. அதைப் புகழாதவர் இல்லை; போற்றாதவர் இல்லை.

முதலில் இந்த 'வானம்பாடி' என்ற அதிசயமான பட்சியைப்பற்றி நாம் சில விஷயங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பட்சியைப் பற்றி ஆங்கிலேயர்கள் பிரமாதமாய்ச் சொல்லுகிறார்கள். இது வானத்தில் பாடிய வண்ணம் வெகு உயர ஏறிக்கொண்டே போகுமாம். இதன் பாட்டு வர்ணிக்க முடியாத இன்ப கீதக்

குழலோசையா யிருக்குமாம். இந்த 'வானம்பாடி' யின் கீதத்தைச் சில கிராமப்போன் பிளேட்டுகளில் கேட்கும் போதே, நாம் பேரானந்தம் அடையும்படி இருக்கிறது. சங்கீத மேதை ஒருவன், நேர்த்தியான புல்லாங்குழலில், லளிதமான ஒரு ராகத்தைக் கானம் செய்தால் எப்படி யிருக்கும்? அதேபோல் இருக்கும் இந்த 'வானம்பாடி' யின் கீதம் என்று தோன்றுகிறது. இது வானத்தில் பறக்கும்போது, இந்த மண்ணுலகை மறந்துவிட்டதோ என்றுதான் நாம் நினைக்கும்படியிருக்கும். அப்போது இது ஒரு சிறு புள்ளிபோல் தோன்றும். அந்தப் புள்ளி கூடச் சில சமயம் நம் கண்ணிலிருந்து மறைந்துவிடும். ஆனால், இதன் அற்புத கானம் மட்டில் நம் காதுகளில் பொழிந்துகொண்டே யிருக்குமாம். இதை 'அலையும் குரல்' என்கிறார் வேர்ட்ஸ்வொர்த்; 'ஆனந்த சொரூப மான ஆவி' என்கிறார் ஷெல்லி. இத்தகைய அபூர்வ மான ஒரு பட்சி வானம்பாடி.

இந்தப் பட்சியை ஷெல்லி பற்பல விதமாய் வர்ணிக்கிறார். இடையிலே, ஒரு கவிஞனுக்கும் இதை அவர் ஒப்பிடுகிறார். இது ஒரு கவிஞனைப்போல் இருக்கிறதாம். அந்தக் கவிஞன் என்ன செய்துகொண்டிருக்கிறான்? சிந்தனை என்ற ஒலிப்பிழம்புக்குள்ளே அவன் ஒளிந்துகொண்டிருக்கிறான். அப்படி ஒளிந்துகொண்டு ஆனந்த கீதங்களைப் பொழிந்துகொண்டிருக்கிறான். அந்த கீதங்கள்வெ வறுமையே போகின்றனவா? அவை உலகத்தோரை உணர்ச்சிப் பெருக்கிலே ஆழ்த்தி, பண்படுத்தி அவர்கள் கொள்ளாத நம்பிக்கைகளைக் கொள்ளச் செய்கின்றன; அஞ்சாத அச்சங்களை அஞ்சச் செய்கின்றன! இப்பேர்ப்பட்ட கவிகளைப் பொழியும் கவிஞனுக்குத் தான் ஒப்பிடுகிறார் ஷெல்லி தமது வானம்பாடியை.

"அடேடே! இப்படியா செய்கிறான் அந்த கவிஞன்! சேச்சே அவனை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். இது

பிரசாரம் அல்லவா? கலையிலே பிரசாரம் ஏது?'' என்று கூச்சலிடுவார் 'கலை கலைக்காகவே' என்று எங்கேயோ படித்துவிட்ட கிளிப்பிள்ளை விமர்சகர். 'மரத்தில் மறைந்த மாமதயானை' யைக் காணுமல், 'மரத்தை மறைத்த மாமத யானை' யையே காணும்படி, காண்பவரின் உள்ளத்தை வசீகரிப்பதிலேதான் கலைஞன் சூட்சுமம் அடங்கியிருக்கிறதே யொழிய, பிரசாரத்திலோ அல்லது பிரசாரம் இல்லாமையிலோ அது அடங்கியிருக்கவில்லை.-'கலை கலைக்காகவே' என்பதில் உண்மை யிருக்கிறது. ஆனுல், 'சகல கலைகளுமே பிரசாரந்தான்' என்பதிலும் உண்மையிருக்கிறது. சொல்லப்போனுல், இரண்டும் ஒரே உண்மையின் இரண்டு முகங்கள். கிளிப்பிள்ளைகளுக்கு இது புரியாது. அவைகள் புரிந்து கொண்டுதான என்ன ஆக வேண்டும்?

• •

மனித உள்ளம் பண்பட்டு மேலோங்கி உத்தம வாழ்வு வாழவேண்டுமானுல், மனித நாகரிகம் மேலும் மேலும் உயர்வடைய வேண்டுமானுல், மனிதனுக்கு மேலான பலன்களில் நம்பிக்கை வேண்டும்; கீழான பொருள்களில் அச்சம் வேண்டும். அந்த நம்பிக்கையும் இந்த அச்சமும் எத்தனைக்கெத்தனை அவனுடைய உணர்ச்சியோடு உணர்ச்சியாய் ரத்தத்தோடு ரத்தமாய் ஊறிப்போகின்றனவோ, அத்தனைக்கத்தனை தான் அவன் உத்தம வாழ்வு, வீரவாழ்வு, இன்பவாழ்வு வாழ முடியும். இப்படிப் பண்படச் செய்யும் சாதனம் பணம் அல்ல; சட்டம் அல்ல; குண்டு, துப்பாக்கிகள் அல்ல. மனிதனை நடமாடும் சவம் ஆக்கத்தான் அவைகளால் முடியும். நாகரிகப் பண்பாடு எங்கே இற்று விழுகிறதோ அங்கே நேர்ந்த பிளவைப் பூசி மெழுகத் தோன்றிய மிருக சாதனம்தான் பணமும் சட்டமும் குண்டு துப்பாக்கிகளும். மனித உணர்ச்சியிலே, எழவேண்டிய நம்பிக்கைகளையும், ஒதுங்கவேண்டிய பயங்களையும் தைக்கக்கூடிய

சாதனங்கள் உண்மையான கவிதை, கலை, இலக்கியங்களேயாகும். இவை வெறும் பிரசாரமாக இருக்க மாட்டா. இவற்றின் ஜீவசக்தி நம் உணர்ச்சியிலே தைத்து, மண்ணைப் பொன்னுக்கும் ரசவாதியைப்போல் நம் உள்ளப் பண்பாட்டை உயர்த்திவிடும்.

பாரதியாரின் கவிதைகளை இந்த முறையிலே பார்க்கும்போது, அவற்றின் ஜீவசக்தி எவ்வளவு அபாரமானது என்று நன்கு தெளிவாகும். 'கவியும் வசனமும்' என்ற தலைப்பிலே மேற்கோள் தந்திருக்கிறேனே ஒரு சம்பவம்; அதைவிட வேறு சான்றும் இதற்கு வேண்டுமா? "பாரதியார் பாடிய இன்னிசைக் கீதங்களைக்கேட்ட ஒரு மிதவாதி, அந்தக் கானத்தின் மந்திர சக்திக்குக் கட்டுப்பட்ட கைதியாகிவிட்டார்" என்று காலஞ்சென்ற ஏ. அரங்கசாமி ஐயங்காரே சாட்சியம் கூறுகிறார் என்றால், அதைக் கட்டுக்கதை என்று யாராவது சொல்ல முடியுமா? இதுவே வேண்டாம்; பாரதியாரின் பாடல்கள் இன்று தமிழ்நாடு பூராவுமே வியாபித்துவிட்டன. காரணம் அவற்றின் ஜீவசக்திதான்.

பாரதியாரின் பாடல்கள், புதிய புதிய உன்னதமான நம்பிக்கைகளைத் தமிழனின் உள்ளத்தில் எழுப்புகின்றன; அற்பத்தனங்களை அருவருக்கச் செய்கின்றன; அற்புத உலகொன்றுக்கு அவனைக் கூவியழைத்துச் செல்கின்றன; தீரம், இன்பம், அறிவு என்று, தமிழனின் வாழ்வுக்குச் சுருதி கூட்டுகின்றன :

'பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்,
புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழு பசும் பொற்சுடர் எங்கணும் பரவி
எழுந்து விளங்கிய தறிவெனும் இரவி'

என்று, அவனுக்கு உறுதி கூறுகின்றன. இன்றைய தமிழிலக்கிய உலகில் அந்த இரவியின் சுடர்க்கதிர்கள் பாரதி

யாரின் பாடல்களே யாகும் என்று நாம் நிச்சயமாய்ச் சொல்லலாம்.

அந்தப் பாட்டுகள் தமிழனுக்கு அபரிமிதமான பண்பும் பயனும் அளித்திருக்கின்றன. அவை அவனுடைய உணர்ச்சியிலே தைத்துவிட்டன. அறிவிலும் படிப்பிலும் மிக்க ஓர் ஆங்கிலப் புரொபஸரே சொன்னார் "பாரதியார் ஷேக்ஸ்பியரை விட உயர்ந்த கவிஞரென்று நான் நிரூபிப்பேன்" என்பதாக. பல நண்பர்கள் கூடியிருந்த கூட்டம் ஒன்றிலேயே அவர் இப்படிச் சொன்னார். அவருடைய பதவிப் பொறுப்புக் காரணமாக இதைப் பகிங்கரமாக எழுத, இன்று அவர் கூச்சப்படலாம். ஆனால், நாஞ்சில் நாட்டுக் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை, பாரதி பாட்டினால் தம் உள்ளத்தில் எழுந்த கிளர்ச்சியை அழகான கவிதையிலே சொரிந்திருக்கிறார். அந்த வரிகளைப் பாருங்கள்:

சுதந்திரப் பாட்டில்-உள்ளம் துடுதுடிக்குதடா
பதமெழும்புதடா-கையும் பட படக்குதடா!
'தொண்டு செய்யுமடிமை' என்னும் சுடுசரமோடி
மண்டையைத் தாக்குதடா-நெஞ்சம் மடியப்பாயுதடா
பாவின் நயமெல்லாம்-யானும் பகர வல்லேனோ?
ஆவின்பாற் சுவையை-நாழி அளந்து காட்டிடுமோ?
நாட்டுமொழியுமவன் பாட்டினிசையில்-மிக்க
நல்ல கற்கண்டினிமை சொட்டுமேயடா!
ஏட்டிலும் மந்திரந்தான் கண்டவருண்டோ-ஈதவ்
வீசன் திருவருளென் றெண்ணுவாயடா!

## 8. பாரதியின் வேதாந்தம்

மீண்டும் ஷெல்லியோடுதான் பாரதியாரை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 'வானிலுறை ஆனந்த வாரிதியே! என் நொய்யவிச் சிந்தனைக்கு மன்னித்தருளுக.

இவ்வுலகம் வெறும் சூன்யமாக - அகண்ட, மங்கலான, ஒளியற்ற, ஆழ்ந்த, ஜன சஞ்சாரமற்ற சூன்யமாக - இருக்குமானால், இறைவனும், வானுலகும், மண்ணும் வெறும் பொய்யாக இருக்குமானால்...?' என்று பொருள் பட, அவர் ஓரிடத்தில் உள்ளங் கலங்குகிறார். ஷெல்லி யின் கவிகளைப்பற்றிப் பொதுவாக ஒன்று கூறுவதுண்டு. ஏக்கமே அவரது கவிதையில் வேகம் நிறைந்தது. அவருடைய கவிகளிலிருந்து ஒரு வேதாந்தத்துக்கு உருக் கொடுக்க இயலுமானால், அது ஏக்கத்தை அஸ்திவார மாகக் கொண்டதாகவே யிருக்கும். அவருடைய கவி களுக்குள்ளே மிகச் சிறந்ததும், அழகு நிறைந்ததுமான வானம்பாடியில், நாங்கள் முன்னும் பின்னும் நோக்கி, இல்லாப் பொருளுக்கு ஏங்குகிறோம், எங்களது மனப் பூர்வமான நகைப்பிலே சிறிது துன்பமும் இணைந்திருக் கிறது. எங்கள் இனிமைமிக்க கீதங்கள், பெரும் துயர சிந்தனைகளைக் கூறுவனவாகும்" என்று, அவர் மறுகு கிறார். கவி ஷெல்லி, சோகத்தைத் துணைகொண்ட ஒரு வேதாந்தி.

தமிழ் நாட்டுத் தவப் புதல்வரான பாரதியாரோ, இதற்கு நேர் மாறுபட்டவர். பொதுவாக, கவிகளின் கவிதா வேகத்தில் பிரவகிக்கும் இலக்கிய ரசத்தைப் பருகுவதோடு நாம் நின்று விடுவதே பொருத்தம். என்றாலும், உயர்ந்த கவிகள், உணர்ச்சி மூலம் உண்மை காணும் வேதாந்திகளே யாவார்கள் என்பதை நாம் மறக்கலாகாது. எனவே, அவர்களுடைய கவிதைகளில் மின்னும் தெய்வத ஜோதியை நாம் காண முயல்வதில் தவறு ஏதுமில்லை. நம் பாரதியின் கவிதா வேகத்தில், நாம் காணக்கூடிய தத்துவம் யாது? கவிஞர் ஷெல்லி யைப்போல் "வாழ்வோர் வாழ்வென்றுரைக்கும் மேற் பூச்சான இந்த வர்ணத் திரையைத் தூக்கிவிட வேண்

டாம்" என்று பாரதியார் இரங்கவில்லை. வாழ்வு அவருக்கு உண்மைக் காட்சியையே நல்குகிறது.

"நிற்பதுவே, நடப்பதுவே,
பறப்பதுவே நீங்களெல்லாம்,
சொற்பனந் தானோ? - பல
தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே. கேட்பதுவே,
கருதுவதே நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ? - உம்முள்
ஆழ்ந்த பொருளில்லையோ?"

என்று நம் கவி திலகம் வினவுகிறார், உலகம் மாயையா, வெறும் கனவுதானா? வாழ்வைப் பொருளற்ற மேற் பூச்சான சூன்யமாக, பாரதியாரின் கவிதையுள்ளம் காணவில்லை. எனவே.

"காலமென்றேயொரு நினைவும்
காட்சியென்றே பல நினைவும்
கோலமும் பொய்களோ? - அங்குக்
குணங்களும் பொய்களோ?
சோலையிலே மரங்களெல்லாம்
தோன்றுவதோர் விதையி லென்றால்.
சோலை பொய்யாமோ? – இதைச்
சொல்லொடு சேர்ப்பாரோ?"

என்று எள்ளி, மேலும்,

"காண்பதெல்லாம் மறையுமென்றால்
மறைந்ததெல்லாம் காண்பமன்றோ?
வீண்படு பொய்யிலே - நித்தம்
விதி தொடர்ந்திடுமோ?
காண்பதுவே யுறுதிகண்டாய்,

காண்பதல்லா லுறுதியில்லை;
காண்பது சத்தியமாம் - இந்தக்
காட்சி நித்தியமாம்''

என்கிறார் பாரதியார்.

காலம் ஒரு சோலை; நிற்பனவும், நடப்பனவும், பறப்பனவும், அந்தச் சோலையிலே காட்சி தரும் தருக்களாக இருக்கின்றன நம் கவி திலகத்துக்கு. வாகனமும், இளவெயிலும், மரச்செறிவும் கானலின் நீரல்ல; காட்சிப் பிழையுமல்ல. அகண்ட காலச் சோலையின் பூரண தரிசனம், அவரது கவிதைக் கண்ணுக்குப் புலனாகிறது. அவற்றின் நித்யத்துவத்தை, உட்பொருளை, அவர் காண்கிறார். விண்ணகத்தே ஒளி செய்யும் நட்சத்திரங்களைப் பற்றிய ஒரு விஞ்ஞான உண்மையை நீங்கள் அறிவீர்களா? நாம் இன்று காணும் அந்த நட்சத்திரங்கள், உண்மையிலே இந்நேரம் அங்கே யிருக்கின்றனவோ இல்லையோ என்ற ஐயம் உங்களுக்கு எழுந்ததில்லையே! எத்தனையோ கோடி ஆண்டுகளுக்கு முன்பு அவை இருந்த ஒளி நிலையே இன்று நம் கண்களுக் கெட்டுகிறது என்ற விந்தைதரும் உண்மையை, நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இந்தக் காட்சியிலே காலமும் தூரமும் ஒன்றுபடுவது உங்களுக்குப் புலனாகிறதா? ஆகுமானால், பாரதியார் தரிசித்த காலச் சோலையையும் உங்கள் கற்பனை காணுவது அசாத்தியமல்ல. சோலைக்குள்ளே காட்சிப் பொருள் யாவும் அடங்கும். எனவே, அந்தச் சோலை பொய்யாமோ?

பாரதிக்கு, காணுங் காட்சி நித்தியம்; வாழ்வு நித்தியம். எனவே அவருடைய கவிகளிலே, இல்லாப் பொருளுக்கு ஏக்கமில்லை. அவருடைய கவிகள் மனச் சோர்வுக்கு மகிமை யளிக்கவில்லை. பாரதிக்கு, சோர்வு என்பதுதான் வீண் மயக்கக் கனவாகும். அவர் வேண்டு

பவை சுதந்தர இன்பங்கள். உயிருக்கு ஊக்கமளித்து, உறுதி பயப்பவை அவருடைய பாடல்கள். "எத்தனை கோடி யின்பங்கள் வைத்தாய் - எங்கள் இறைவா! இறைவா! இறைவா!" என்று அவர் பரவச வெறி கொள்ளுகிருர். சோர்ந்து கிடக்கும் - அடிமைத் தளையில் பிணிப்புண்டு நிற்கும்-நாட்டிலே, திக்கற்ற நினைப்பை உதறித் தள்ள ஆவேசம் உண்டாக்கத் தக்கவையாக அவருடைய பாடல்கள் இருப்பதன் காரணம், அவர் உலக வாழ்வின் உண்மையைக் கண்டதுதான்.

அவர் பெருங்காரியங்களிலே ஆர்வம் நிறைந்து, அவற்றை இயற்ற அனவரதமும் ஆத்திர முறுகிருர்:

"சிங்களத் தீவினுக்கோர்
பால மமைப்போம்:
சேதுவை மேடுறுத்தி
வீதி சமைப்போம்;
வங்கத்தி லோடிவரும்
நீரின் மிகையால்
மையத்து நாடுகளில்
பயிர் செய்குவோம்"

என்றும், இன்னும் பல பெருந்தொழிலைச் செய்ய இச்சை கொண்டும், கவிதை வெறியுடன் அடுக்குகிருர். அன்றியும்,

சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேரநன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்"

என்று, இன்பக் களியாட்டு ஆசையையும் இடையே உற்சாகத்துடன் வெளிக்கொட்டுகிருர்.

மண்ணிற் பிறந்தாயிற்று; வாழ்ந்தாகவேண்டும். உழைப்போம்; ஆனந்த மனுபவிப்போம்; யாவும்

பொய்யோ என்று ஏங்குவானேன்? காணும் காட்சியெல்லாம் பொய்யென்றால், காணுமின்பம் யாது மிருப்பதாக, பாரதியாரால் எண்ண இயலவில்லை. அடிமை வாழ்வை, காணும் உலகிலே அவர் வெறுக்கிறார். விடுதலைச் சங்கு அவருடையது.

இன்னும் பாரதியார், கீதைக்கு எழுதியுள்ள உரையின் முகவுரை இறுதியில் பின்வருமாறு கூறுவதையும் இங்கே நோக்கலாம்.

> "உலகமெல்லாம் கடவுள் மயம் என்ற உண்மையான வேதாந்தத்தைக் கீதை ஆதாரமாக உடையது. மாயை பொய் இல்லை; பொய் தோன்றுது. பின் மாறுகிறதே யெனில், மாறுதல் மாயையின் இயற்கை. மாயை பொய் இல்லை; அது கடவுளின் திருமேனி. இங்குத் தீமைகள் வென்றொழித்தற் குரியன. நன்மைகள் செய்தற்கும் எய்துதற்கும் உரியன. சரணாகதியால் கடவுளிடம் தீராத மாறாத பக்தியால்-யோகத்தை எய்துவீர்கள். எல்லா ஜீவர்களையும் ஸமமாகக் கருதக் கடவீர்கள். அதனால், விடுதலை அடைவீர்கள். இல்லறத் தூய்மையால் ஈசத்தன்மை யடைவீர்கள்."

பாரதியின் கவிகள் யாவற்றிலும், இந்த வேதாந்தமே உயிர் நாடியாயிருக்கிறது. "நாட்டிலே இன்பங் கூட்டி வைப்பீரே! நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே!" என்பது அவரது உபதேசம்.

கவிதையிலே இரண்டு வகையுண்டு என்று ஆங்கில இலக்கிய ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறுகிறார். ஒன்று, சக்திக் கவிதை; மற்றது, அழகுக் கவிதை. பாரதியார் சக்திக் கவிஞர்; அன்றி, அழகுக் கவிஞருமாவார். சக்தியை உருவகம் செய்ததொரு தெய்வமே அவருடைய கவிதையின் ஜீவசுரமாக - அதிதேவதையாக - அமர்ந்துவிட்டாள். சக்தி, சக்தி, சக்தி - இதுவே அவரது மூச்சுக்காற்று.

பாரதிக்குப் பாரிலுள்ள அத்தனையும் அன்னை பராசக்தி யின் லீலை. மனித வாழ்வு, அவள் கையிலே 'சுடர்மிகும் அறிவுடன்' விளங்கும் வீணை. அவ்விதமாக,

"நல்லதோர் வீணை செய்தே அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?"

---



# அனுபந்தம் 1

## குவளைக் கண்ணன் குறிப்புக்கள்

[பாரதியாரின் ஆப்த நண்பர் குவளைக் கிருஷ்ணமாச் சாரியார், 'ஹிந்துஸ்தான்' வாரப்பதிப்பின் 1938 - ஆம் ஞு பாரதி மலரில் எழுதிய சில குறிப் புக்கள்.]

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் நான் புதுவை யில் பாரதியுடன் இருக்கும்போது, "மகான்கள் தீர்க் காயுசா யில்லாமல் போய்விடுகிறார்களே? பாரதியாரே, அதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டேன்.

"மகான்கள் பூலோகத்திற்குத் தேவ தூதர்கள். ஜனோபகாரார்த்தமாக அவர்கள் உதிக்கிறார்கள். பூலோ கத்தில் அவர்கள் வந்த காரியமானதும் அவர்கள் இவ்வுல கத்தில் நிற்கமாட்டார்கள். மறைந்துவிடுவார்கள்" என்றார். அவர் வாக்கையும் அனுபவத்தையும் கவனித் தால், அது சரியென்றே தோன்றுகிறது.

ஏனென்றால், ஸ்ரீ விவேகானந்தர் நாற்பதாவது வயதில் காலமானார். அவருடைய சிஷ்யையும் வேத புத்திரி யுமான சகோதரி நிவேதிதா தேவி, தமது நாற்பதாவது வயதில் காலமானார். நிவேதிதாவுக்குச் சிஷ்யரான பாரதியாரும் நாற்பதாவது வயதில் காலமானார். இவ்விதம் குரு பரம்பரை காலமான விஷயம் அதிசயமாக இருக் கிறது.

புதுவையில் அவர் எங்கேனும் நடந்து செல்லும் போது, பாரதியாருடன் நானும் போக விரும்பி நடந்தால், அவருக்குச் சரியாக என்னால் நடக்க முடியாது. அவருக்கு வீதிகளில் மெதுவாக நடக்கத் தெரியாது. எனக்கு

அவசரமாக நடக்க முடியாது. எனவே, என் ஓட்டம் அவர் நடைக்குச் சரியாக இருக்கும்.

புதுவையில் அவர் எழுதிய 'பாஞ்சாலி சபத'த்தின் முதல் பாகத்தை ஒரு ஜமீன்தாரிடம் படித்துக் காட்டினேன். அவர் அதிசயமாகக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவருடன் இருந்த அவருடைய, காரியதரிசி, என்னை "இந்தப் புத்தகம் யார் எழுதியது?" என்று கேட்டார். அதற்கு நான், "பாரதியார் பாடியது" என்று சொன்னேன்.

அவர், "பாரதி எந்த ஊர்?" என்றார்.

"அவர் எட்டையபுரம்" என்றேன்.

"இப்படிப்பட்ட பாடல் எழுதியவர் எட்டையபுரம் அல்ல" என்று அவர் சொன்னார்.

காரியதரிசி அப்படிச் சொன்னதற்கு, நான், "இல்லை ஐயா; அவரே பல தடவைகளில் தாம் எட்டையபுரம் என்று சொல்லியிருக்கிறாரே?" என்றேன்.

"கிடையாது; அவர் எட்டையபுரம் இல்லை. வேண்டுமானால் நீர் நேராகப் போய் இந்தத் தர்க்க சந்தர்ப்பத்தைச் சொல்லி, இன்னொருதரம் கேளும்; என்ன சொல்லுகிறார், பாரும். இருந்தாலும் நான் சொல்லுகிறேன், கேளும். இப்படிப்பட்ட பாட்டு எழுதியவரின் ஊர், பாஞ்சாலங்குறிச்சியாகத்தான் இருக்கவேண்டும். பாஞ்சாலங் குறிச்சி தவிர, மற்ற ஊர்களில் பிறந்தவர்களால் இப்படிப்பட்ட வீரப்பாட்டு எழுதமுடியாது" என்றார்.

அந்தக் காரியதரிசியின் சொல்லில் கொஞ்சம் சந்தேகப்பட்டு நான் பாரதியாரிடம் சென்று, "ஐயா, தாங்கள் எந்த ஊர்?" என்று கேட்டேன்.

"என்ன கிருஷ்ணா, அடிக்கடி எந்த ஊர் என்று கேட்கிறாய்? எட்டையபுரம், எட்டையபுரம் என்று எத்தனை

தடவை சொல்லுவது!'' என்றார். அதன்பேரில் நான் மேற்படி ஜமீன்தார் வீட்டில் நடந்த சம்பவங்களைச் சொன்னேன். பிறகு புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டே, "அந்த ஓரந்தான்'' என்றார் பாரதியார். எட்டையபுரம் ஓரந்தானும் பாஞ்சாலங்குறிச்சி.

ஒரு நாள் பாரதியாரை, "ஐயா, இந்த ஊரில் நல்ல மடு ஒன்று கொஞ்ச தூரத்தில் இருக்கிறது, தாங்கள் தினம் அங்கு ஸ்நானத்திற்கு வர முடியுமா?'' என்று கேட்டேன்.

"எங்கே? எங்கே?'' என்று அவர் பரபரப்புடன் கேட்டார்.

"நமது வீட்டிற்கு மேற்கே சுமார் இரண்டு மைல் தூரத்தில். அந்த மடுவிற்கு விடியற்காலை நாலு மணிக்கெல்லாம் சென்றால்தான், நிம்மதியாகக் கும்பலில்லாமல் ஸ்நானம் செய்யலாம்'' என்றேன்.

"விடியற்காலம் நீ எப்பொழுது வந்து எழுப்பினாலும், உன்னுடன் வருகிறேன். தப்பாமல் விடியற்காலையில் வீட்டில் வந்து என்னை எழுப்பு'' என்றார் பாரதி.

அவர் சொன்னபடி மறுநாட் காலையில் நாலுமணிக்கு அவர் வீட்டுக் கதவைத் தட்டினேன்.

"யார்?'' என்றார் பாரதியார். "ஏன்?'' என்றேன். உடனே சந்தோஷமாக எழுந்து வந்து கதவைத் திறந்து என் கூடவே மடுவுக்குக் கிளம்பினார். போகும் மார்க்கத்தில், இவர் வீட்டிற்கும் மடுவிற்கும் இடையில் ரஸ்தாவிற்கு இருபுறத்திலும் நஞ்சை வயல்களும் தென்னந் தோப்புகளும் இருந்தன. இவற்றின் செழுமையையும், பிரகிருதியின் அழகு ஆயுதங்களையும் - பிறப்பிலேயே வர கவியாதலால் - எனக்குத் தெரியாமலேயே தாம் கவனித்துக் கவனித்து, குயில் பாட்டுக்கு அடிப்படை தேடிக்கொண்டார்.

அன்று அவரும் நானும் ஒரு மடுவில் ஸ்நானம் செய்தோம், இவ்வாறு இரண்டு நாள் ஆயிற்று. மூன்றும் நாள், நான் அவர் வீட்டிற்குப் போகாமையால் அவர் என் வீட்டிற்கு விடியற்காலையில் நடந்துவந்து கதவைத் தட்டி எழுப்பினர். உடனே நான் விழித்து, குரலிலிருந்து பாரதி என்று தெரிந்து, என் தாயாரிடம், "அம்மா, இவர்தானம்மா பாரதி" என்றேன்.

என் தாயார் உடனே கதவைத் திறந்து, பாரதியை உள்ளே அழைத்து உட்காரச் சொன்னள். பிறகு, "பையா! பாரதி, பாரதி என்ருயே; அவரைச் சுப்பிர பாதம் சொல்லச் சொல்லு, பார்ப்போம்" என்ருள்.

அதற்குப் பாரதியார், "சுப்பிரபாதம் என்ருல் என்ன ?" என்று கேட்டார்.

உடனே என் தாயார், "சுப்பிரபாதம் என்ருல் என்ன என்கிருரே! இவ்வளவுதான உன் பாரதி!" என்ருள்.

இதனிடையில் நேரமாகவே, நாங்களிருவரும் மடுவுக்குப் புறப்பட்டோம். வழியில் பாரதியாருக்கு மனத்தில் நிம்மதியில்லாமல் 'சுப்பிரபாதத்திற்கு' என்ன அர்த்தம் கேட்டார்.

"சம்ஸ்கிருத சுப்பிரபாதம், தமிழில் திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி" என்றேன். திருப்பள்ளியெழுச்சியில் ஒரு பாட்டுச் சொல்லச் சொன்னர். நான் சொன்னேன். அதைக் கேட்டு, அதே மாதிரியாகப் 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி'யை எழுதி, என் தாயாரிடம் அந்தப் பாடல்களை நேராக முதல் முதலில் பாடிக் காட்டினர்.

பாரதியார் வீட்டில் நான் நாலாயிரப் பிரபந்தம் பாராயணம் செய்வதுண்டு. அவர் மௌனமாக ஆழ்ந்த

கவனத்துடன் பத்திரிகைகளுக்கு வியாசங்கள் எழுதிக் கொண்டிருக்கும் ஒரு சமயம். என்னை மௌனமாகப் பாராயணம் செய்துகொள்ளும்படியாகச் சொன்னார்.

அதற்கு நான், "ஐயா, எழுதும் காரியம் தங்களுடையது, படிக்கும் காரியம் என்னுடையது. அவாளவாள் காரியத்தை அவாளவாள் ஏககாலத்தில் கவனத்துடன் செய்துவந்தால், யாருக்கு என்ன நஷ்டம்?" என்றேன்.

அதற்கு அவர், "நீ சத்தம் போட்டுப் படித்தால் நான் எழுதும் காரியத்துக்குத் தடையாக இருக்கிறது" என்றார்.

அதற்கு நான், "ஐயா. நீங்கள் மற்ற மனிதர்கள் மாதிரி சாதாரண மனிதராக என் புத்தியில் படவில்லை. ஆகையால்தான், தாங்கள் எழுதும்போது நானும் கூசாமல் பாராயணம் செய்து வருகிறேன். ஏககாலத்தில் ஒரு காரியத்திற்குமேல் காரியங்கள் செய்யவல்ல சக்தி தங்களிடம் இருப்பதாக எண்ணி நான் படித்துவருகிறேன்" என்றேன்.

உடனே அவர், "நான் உன் வழிக்கு வருவதில்லை. நீ எப்போது வேண்டுமானாலும் படிக்கலாம்" என்றார்.

ஒரு நாள் பாரதியார், "கிருஷ்ணா, இந்த நாலாயிரம் எத்தனை ஆழ்வார்கள் சேர்ந்து பாடியது?" என்று கேட்டார்.

"பத்து ஆழ்வார்களின் பாடல்களெல்லாம் சேர்ந்து ஒரு நாலாயிரப் பிரபந்தம்" என்றேன்.

"பத்து ஆழ்வார்கள் சேர்ந்து நாலாயிரம் பாடினார்களே! நான் ஒருவனே ஆறாயிரம் பாடுகிறேன், பார்!" என்றார்.

"உங்கள் ஒருத்தரால் ஆறாயிரம் பாட முடியாது. ஏனெனில். கவி முற்ற முற்ற மனிதனுக்கு ஆயுசு

குறைவு. கலி முற்றிய காலத்துச் சிறிய மனிதர்கள் நாம். ஆகையினால் முடியாது'' என்று நான் சொன்னேன்.

''நல்லது பார்'' என்ற அவர், 'பாரதி ஆறுயிரம்' என்று ஒரு நூல் எழுத ஆரம்பித்தார். இதனிடையில் குடும்பக் கவலை, சள்ளை, வறுமை, வியாதி, முடிவில் மரணம். ஆறுயிரம் பாடல்கள் பூர்த்தியாகவில்லை, அறுபத்தாறுதான் பாடி முடிந்தன. அவர் காலத்திற்குப் பின் இதை அச்சிட்டவர்கள் பாடல்களைப் கணக்கிட்டு இந்த நூலுக்குப் 'பாரதி அறுபத்தாறு' என்று பெயரிட்டு அச்சிட்டார்கள்போலும்.

''ஐயா, பாரதியாரே! உங்கள் கொள்கைகள், கருத்துக்கள் எல்லாம் எனக்குத் திருப்திகரமாக இருக்கின்றன. தாங்கள் சொல்வதை நான் ஒப்புக்கொள்வதும், நான் சொல்வதைத் தாங்கள் ஒப்புக்கொள்வதும் நமக்குள் இயல்பாக இருக்கிறது. ஜனங்களில் பலர் நாம் தப்பிதமான கொள்கைகளை வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்களே, அதற்கென்ன சொல்லுகிறீர்கள்?'' என்று நான் ஒரு சமயம் கேட்டேன்.

''நாம் இப்போது சொல்லுபவற்றை யெல்லாம் நானூறு வருஷங்கள் கழித்து உலகம் ஒப்புக்கொள்ளும். நாம் இன்னும் நானூறு வருஷங்களுக்குப் பின்னாலே தோன்றவேண்டியவர் - முன்னாலேயே தோன்றிவிட்டோம், அதற்கென்ன செய்வது?'' என்று பதிலளித்தார் பாரதியார். அவர் இவ்வாறு சொல்லி 25 - வருஷந்தான் ஆகிறது!

——

## அனுபந்தம் 2

### பாரதியும் அவரது உபதேசமும்

['சுதேசமித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன், 11-9-39-இல் பாரதி தினத்தன்று திருச்சி அகில இந்திய ரேடியோ நிலயத்தல் செய்த பிரசங்கம். நிலையத்தார் அனுமதியுடன் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.]

பாரதி இறந்து இன்று 18 வருஷங்கள் ஆகின்றன. அவர் பேசிக் கேட்ட பலர் உயிருடன் இருக்கின்றனர்; பாடிக்கேட்ட பலர் இருக்கின்றனர். அவருடன் நெருங்கிப் பழகிய பலரும் இருக்கின்றனர், இவர்களுக்கெல்லாம் ஒரு தீராத குறை. அது என்ன? "அன்று பாரதியைத் திண்டாடவிட்டார்களே; இன்று கொண்டாட வந்துவிட்டார்களே; என்ன வஞ்சக உலகம் இது!" என்கிறார்கள். உண்மை, மறுக்க முடியாத உண்மை. குறைகூற இடமுண்டு. கூறுவதும் எளிது. கூறி லாபமென்ன? போனவர் திரும்புவரா? திரும்பினாலும் விரும்புவரா? மெய்யறிவுபெற்ற மேன்மக்கள் குலத்தில் பாரதி பிறந்தார். துன்பக் கடலில் தத்தளித்தார். இன்பத்தையே கடைந்தெடுத்தார். 'கடன் பட்டார் நெஞ்சம் போல்' என்று கம்பர் பாடினார், கடன் சூழக் காலம் கழித்தார் பாரதி. கவலை கொண்டாரோ? இல்லை. நெஞ்சம் கலங்கினாரோ? இல்லை. பராசக்தி மீது பாரத்தைப் போட்டார். பாடிப் பாடி மெய்ம்மறந்தார். சோதனையெல்லாம் சோபையை விளக்கிற்று. தங்கத்தைக் காய்ச்சக் காய்ச்ச, மாற்றுக் குறையுமா? மாசு மடிந்து ஒளியே வீசும். சோதனை போதனையாக முடிந்தது. க்ஷணப்பித்தம் தெளிந்து அனுபூதி உண்மையை அறிந்தார்.

* அனன்யாச் சிந்தயந்தோ மாம் யே ஜனா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்

என்று பகவான் கீதையில் அருளியிருக்கிறார். அன்றாட வாழ்வில் இதே தர்மத்தை ஆச்ரயித்தார் பாரதி. பராசக்தியைப் பாராட்டி, விக்கினங்கள் விலக, உடலும் உயிரும் ஒளி வீசப்பெற்றார் பாரதி.

** யோ மாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பச்யதி
தஸ்யாஹம் நப்ரணச்யாமி ஸ ச மே ந ப்ரணச்யதி

என்று கிருஷ்ண பரமாத்மா கூறினார். ஆத்ம சோதனையில் இறங்கி, ஆழ்ந்த அறிவு பெற்று, இதே விஷயத்தை இன்னும் விஸ்தாரமாகப் பாரதி விளக்கியிருக்கிறார். பாரதியின் நூல்கள் கோவையாக வெளிவந்திருக்கின்றன. தொடர்ந்தாற்போல் அவைகளைப் படிக்கவேண்டும். அப்பொழுது அவருக்கு ஏற்பட்ட காலபக்குவம் தானாகத் துலங்கும்; சத்தியாக்கிரகியாக மாறிய பருவத்தை அறியலாம். எனவே, அவருக்காக நாம் இரங்கவேண்டியதில்லை. அன்று அவர் திண்டாடினால், அவருடைய கர்மம் அது. இன்று நாம் கொண்டாடினால், நம்முடைய கடமை இது! இரண்டும் காலனுடைய கருணையென்று கொள்ளலாம்.

பாரதியை நேரில் காணவும், நெருங்கிப் பழகவும், அவருடைய அந்தியகாலத்தில்தான் எனக்குச் சந்தர்ப்பம் வாய்த்தது: புதுவையிலிருந்து புறப்பட்ட பிறகுதான். ஒருநாள் காலை 10-மணி இருக்கும். ஆபீசில் தபால்

*வேறு நினைப்பின்றி என்னை வழிபடுபவர் எவரோ அந்த நித்ய யோகிகளின் நன்மை தீமைகளை நான் தாங்குவேன்.

**எவன் எங்கும் என்னைக் காண்கிறானோ, எல்லாப் பொருளையும் என்னிடத்தே காண்கிறானோ, அவனுக்கு நான் அழியமாட்டேன்: எனக்கவன் அழியமாட்டான்.

பார்த்துக்கொண்டிருந்தேன். கன வேகமாய் ஒரு ஜட்கா வண்டி ஆபீசை நோக்கி வந்தது. ஆபீஸ் பெயரைப் பார்த்ததும் நிறுத்தென்று கூவினார் வண்டியிலிருந்தவர். நிற்கிறவரையில் தாங்கவில்லை. குறுக்குக் கம்பியைத் தள்ளிக்கொண்டு கீழே குதித்தார். தள்ளின கம்பி திரும்பி வந்துசொக்காயில் மாட்டிக்கொண்டது. அலக்ஷிய மாய்க் கையை உதறினார். சொக்காயின் கை கிழிந்து விட்டது. அதையும் கவனிக்கவில்லை. ஓடோடியும் உள்ளே வந்தார். நான் இருந்த அறைக்குக் கதவுகள் இருக்கக் கண்டு சற்றுத் தயங்கினார். மெள்ளக் கதவைத் தட்டினார். பதில் இல்லை. கதவுக்குமேல் தலையை நீட்டி உள்ளே பார்த்தார். என்னைக் கண்டதும் சிறிது லஜ்ஜைப் பட்டார். "யார்?" என்று நான் கேட்டேன். "நான்தான் சுப்பிரமணிய பாரதி" என்றார். 'வாருங்கள், உள்ளே வாருங்கள், உட்காருங்கள்" என்றேன்.

அன்று கண்ட பாரதி இன்றளவும் என் அகக் கண் முன் நின்றுகொண்டே யிருக்கிறார். நடுத்தர உயரம்; ஒற்றை நாடி; மாநிறம் படைத்த மேனி; புரிபுரியாய்ச் சுற்றிய வால்விட்ட தலைப்பாகை; அகன்ற நெற்றி; அதன் மத்தியில் காலணா அளவு குங்குமப் பொட்டு. அடர்ந்த புருவங்கள், உருண்ட கண்களைக் காத்துவந்தன. நிமிர்ந்த நாசி, வாடிய கன்னங்களை விளக்கிக் காட்டிற்று. முறுக்கிய மீசை, மேல் உதட்டை மறைத்தும், உறுதி யிழந்த உயிர் நிலையைக் கீழ் உதடு காட்டிவிட்டது. உடல்மீது பித்தான் இல்லாத ஷர்ட்டு; அதை மூட ஓர் அல்பக்கா கோட்டு; வண்டியிலிருந்து குதித்தபோது அதுவும் கிழிந்துவிட்டது. நாற்காலியில் உட்கார்ந்தார். நா எழவில்லை; கண்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன; அறையைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தன; என்னையும் ஏற இறங்கப் பார்த்தன. வெருண்ட கண்கள்; வேதனை வடிந்த கண்கள்; சாந்தம் நிறைந்த கண்கள் வசியம்

மிருந்த கண்கள். அவை என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டன. அன்று நான் பாரதி தாஸனாக மாறினேன். பழகப் பழக, நேசம் பாசமாகவே மாறிற்று.

பாரதியிடத்தில் நான் கண்ட விசேஷம் என்ன? பால் மணம் மாறாத குழந்தைகளிடம் காணும் குணங்களைக் கண்டேன். சூது வாது தெரியாது; நயமுண்டு, பயமில்லை; கையிலிருப்பதைப் பகிர்ந்து கொடுப்பார்; நாளையைப்பற்றி நினைக்கமாட்டார்; படாத கஷ்டங்கள் பட்டார். தழும்பு தரிக்கவில்லை. அறியாத வயதில் தாயை இழந்தார்; அனுபவமில்லாத வயதில் தந்தையை இழந்தார்; போஷகர்கள் ஒரு பக்கம் மறைய, போஷிக்கும் பொறுப்பு இன்னொரு பக்கம் ஏற்பட்டது. இளம் பிராயத்தில் மணம் புரிந்து, குடும்ப பாரம் உறைக்கத் தலைப்பட்டது. பிதுர் ஆர்ஜிதம் பூஜ்யம்; பிழைப்புக்குவழி துலங்கவில்லை. பெரிய படிப்பாளி அல்ல; ஏட்டுப் படிப்பில் என்றைக்கும் நாட்டம் செல்லவில்லை; சென்னை வந்து சேர்ந்தார். சுழலில் சிக்கிக்கொண்டார். சுதேசி இயக்கம் தோன்றிய காலம் அது; விடுதலை வேட்கை பிறந்த காலம், வெற்றி முரசு கொட்டினார் பாரதி. உறக்கம் தெளிய, வீரம் சொரியப் பாடினார் பாரதி. அன்று தாயகத்திற்கு அவர் செய்த சேவை அளவிடற்பாலதன்று. அதிகாரி வர்க்கம் விழித்துக் கொண்டது; புதுவையில் மறைந்தார். மனம் சோர்ந்தார். மறுமலர்ச்சி தோன்றிய பிறகே வெளிவந்தார். பிரஷ்ட வாழ்வும், கஷ்ட ஜீவனமும், நஷ்ட நம்பிக்கையும், அறிவை வளர்க்கும் சாதனங்களாக உதவின. கல்லூரியில் கற்காததைக் கடற்கரையில் கற்றார். சென்னையிலும் புதுவையிலும் அவர் கடற்கரை செல்லாநாள் கிடையாது. கரையில் உட்கார்ந்தவண்ணம், அலைகள் துள்ளித் தாவி, உருண்டு, திரண்டு, புரண்டு, நுரையும் நீருமாய்த் தாண்டவமாடுவதைக் கண்டு களித்தார். இயற்கையிலிருந்து

செயற்கையை அறிந்தார். மனிதவாழ்வின் மூலமந்திரத்தை உணர்ந்தார். சம பாவம் பிறந்தது; நிஷ்காமம் தொடர்ந்தது. வீரம் வைராக்கியமாக மாறிற்று; தர்மம் சேவா ஸ்வரூபம் பெற்றது. புதுவையில் புகுந்த பாரதி வேறு; புதுவையிலிருந்து வெளிவந்த பாரதி வேறு. உள்ளே சென்றவர் வீரர்; வெளியே வந்தவர் ஞானி. ஞானிகளுக்கு இருப்பிடம் இகத்தில் அல்ல. இரண்டு வருஷங்களுக்குள் அழைப்பு வந்துவிட்டது. பூதஉடல் நீத்தார். புகழ் உடல் நிலைத்தது.

பாரதி திருநாளை இன்று தமிழ்நாடெங்கும் கொண்டாடுகிறோம். எதற்காக? அபூர்வமாக, அபாரமாக என்ன செய்து, சாதித்துவிட்டார்? பாரதியின் கவிதையைப் பற்றியும் கற்பனையைப் பற்றியும் பலர் புகழ்ந்து கூறுகின்றனர். கம்பருடனும் காளிதாஸருடனும் ஒப்பிடுகின்றனர். அயல்நாட்டுக் கிரந்தங்களைப் படித்தவர்கள் அந்த நாட்டுக் கவி சிரேஷ்டருடன் ஒப்பிடுகின்றனர். எந்த தேசக் கவியுடனும், எந்த முறையில் சோதித்தாலும், பாரதி சளைக்கமாட்டார் என்பது உறுதி. ஆனால் அவர் செய்த சேவையின் சிறு பகுதியையே அது குறிக்கும். பாஷைக்குப் பெருமையைத் தேடியதே அவர் செய்த சேவை. தமிழ் நாட்டிலே தாய்ப் பாஷையின் மாற்று மங்கி இருந்தது. அந்நிய ஆட்சியில் அந்நிய பாஷைக்கு அளவு கடந்த மதிப்புக் கொடுத்து, ஆணவத்தை இழந்துவிட்டனர் தமிழ் மக்கள். பதவியும் பொறுப்பும் படைத்த பெரியோர் சுயபாஷையில் பேசக் கூச்சப்பட்டனர்: குறைவென்று நினைத்தனர். பாஷையின்மீது பழியைச் சுமத்தினர். பாரதி தோன்றுமுன் இருந்த நிலைமையை இன்றைய நிலைமையுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். மாறுதலுக்கு முக்கிய காரணம் பாரதி என்பது என் சித்தாந்தம். தமிழை உயிர்ப்பித்தவர் அவர்; ஊட்டம் அளித்தவர் அவர். பாஷையின்

லாகவத்தை மெய்ப்பித்தவர் அவர்; பாஷைக்கு மேனியளித்தவர் அவர். எழுதிய தமிழ் சித்திர வடிவம் பெற்றது. முத்துக் கோத்தாற்போல் அவர் எழுதுவார். தன்னந்தனி எழுத்துக்கள்; சின்னஞ்சிறு வார்த்தைகள்! குழந்தைகளின் மழலைச் சொல்போலச் சுவை நிறைந்தவை. தமிழ் கானத்திற்கு இசைந்த பாஷை. வல்லவர் ஆண்டால் ராகமும் தாளமும் தானாகக் கட்டும் என்பதை பாரதி கண்டார். இன்பம் தர, துன்பம் தீர, பயம் நீங்க, பலம் ஓங்க, வீரம் சுரக்க, தீரம் தெறிக்க, உள்ளம் உருக, ஊக்கம் பெருக, தமிழ்மொழிபோல் தரணியில் காண்பது அரிது என்றார் பாரதி. தமிழ்த்தாய்க்கு அவர் ஆற்றிய தொண்டே பெரியது. அதை அறிவுறுத்தவே இன்று அவரைக் கொண்டாடுகிறோம். அவர் ஆத்மா சாந்தி அடைக! அவர் காட்டிய வழி எங்கும் ஓங்குக!

முற்றும்

# ரா ஜா ஜி

## (முதல் இந்திய கவர்னர் ஜனரல்)

(இன்றுவரை நிகழ்ச்சிகள் கொண்ட விரிவான அழகான சரித்திரம்)

"பிரசண்ட விகடன்" ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் எழுதியது. கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் முன்னுரையும் கனம் எம். பக்தவத்ஸலம் அவர்கள் சிறப்புரையும் கோண்டது.

........ ரூ. 2—0—0 ........

### முக்கிய அபிப்பிராயங்களுள் சில

(அமரர்) எஸ். சத்தியமூர்த்தி இந்நூலின் முதற் பதிப்புக்கு அளித்துள்ள சிறப்புரையின் முக்கிய பாகம் :—

"நம் தமிழ்நாட்டு மாபெருந் தலைவரும் தியாகியுமான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் சரித்திரத்தை எழுத முன்வந்ததற்காக ஆசிரியரை நான் பாராட்டுவதுடன், மிகவும் சந்தோஷமும் அடைகிறேன். இந்தச் சரித்திரம் நல்ல முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

டாக்டர் ப. சுப்பராயன் :— " ராஜாஜியின் வாழ்க்கையை முதலிலிருந்து தற்காலம் வரையிலும் நன்கு விவரித்து எழுதியிருக்கிறார். இம்மாதிரியான புத்தகங்களை நமது பள்ளிகளிலிருக்கும் மாணவர்களுக்குக் கொடுப்பது அவசியம்.

கனம் எம். பக்தவத்ஸலம்:—" எல்லோரும் உணரக்கூடிய அளவில் ஆசிரியர் வரைந்த இந்நூலை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

# தலைவர் ஜவாஹர்

எழுதியவர் :
தி. ஜ. ர.

— ரூ. 3—8—0 —



உள்ளுறை


1 வம்சமும் தந்தையும்
2 பாலியப் பருவம்
3 வீட்டிலே வாத்தியார்
4 சீமைப் படிப்பு
5 ஊர் திரும்பியபின்
6 தொழிலா, அரசியலா?
7 மணமும் மலைப்பயணமும்
8 தந்தையின் மனமாற்றம்
9 கிராமங்களிலே இறங்கல்
10 முதல் சிறைவாசம்
11 வெளிவந்தபோது
12 சில அனுபவங்கள்
13 ஐரோப்பாவில்
14 போலீஸ் தடியடி
15 தந்தைக்குப்பின் மகன்
16 உப்புப்போர் ராஷ்ட்ரபதி
17 மோதிலாலின் மறைவு
18 ராஜியும் ராஜிமுறிவும்
19 சிறை ஜன்னல் வழியே
20 கமலாவின் பிரிவு
21 முசோலினியைக் காண மறுப்பு
22 மூன்றும் முறை காங்கிரஸ் மகுடம்
23 அக்காளும் தங்கையும்
24 நாஜி அழைப்பு - நிராகரிப்பு
25 திரிபுரியும் பின்னரும்
26 "வெளியே போ"
27 விடுதலையும் வரவேற்பும்
28 வேவல் திட்ட முறிவு
29 மந்திரிகள் தூது
30 காஷ்மீரச் சம்பவம்
31 முதல் இந்திய தேசிய சர்க்கார்
32 வீகர் பிரவேசம்
33 அரசியல் நிர்ணய சபை
34 பிரிட்டிஷ் வாபஸ் கெடு


---


அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4